# பஞ்சாகமங்கள்

பாடம் 10

யோசேப்பும் அவரது சகோதரரும்

Manuscript

thirdmill

Biblical Education. For the World. For Free.

© 2021 by Third Millennium Ministries

அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டுள்ளன. இந்த வெளியீட்டின் எந்த பகுதியும் Third Millennium Ministries,Inc. 316 Live Oaks Blvd., Casselberry, Florida 32707. இன் வெளியீட்டாளரினுடைய  எழுத்துப்பூர்வ அனுமதியின்றி எந்தவொரு வடிவத்திலும் அல்லது லாபத்திற்கான எந்த வகையிலும் மீண்டும் உருவாக்கப்படக் கூடாது. மதிப்பாய்வுக்கோ, கருத்து தெரிவிக்கவோ அல்லது ஆழ்ந்த அறிவுத்திறன் சம்பந்தப்பட்ட  நோக்கங்களுக்காகவோ சுருக்கமான மேற்கோள்களாக எடுக்கப்படலாம்.

சுட்டிக்காட்டப்படாவிட்டால் எல்லா வேத மேற்கோள்களும் பரிசுத்த வேதாகமத்திலிருந்து வந்தவை, The Bible Society of India Version Tamil-O.V. (New Orhto), copyright © 2018 . அனுமதியுடன் பயன்படுத்தப்பட்டுள்ளது. அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டுள்ளன.

## THIRDMILL ஊழியத்தைப் பற்றி

1997 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட இந்த Thirdmill ஒரு இலாப நோக்கம் இல்லாத சுவிசேஷ மார்க்க கிறிஸ்தவ ஊழியமாகும்.

**வேதாகம கல்வி. உலகத்திற்காக. இலவசமாக.**

ஊழியத்திற்கு போதுமான பயிற்சி இல்லாத உலகெங்கிலும் உள்ள நூறாயிரக்கணக்கான போதகர்கள் மற்றும் கிறிஸ்தவ தலைவர்களுக்கு இலவச கிறிஸ்தவ கல்வியை வழங்குவதே எங்கள் குறிக்கோளாகும். ஆங்கிலம், அரபு, மாண்டரின், ரஷ்ய மற்றும் ஸ்பெயின் நாட்டு  மொழிகளில் இணையற்ற பல்லூடகவியல் பாடசாலை  பாடத்திட்டத்தை உருவாக்கி உலகளவில் விநியோகிப்பதன் மூலம் இந்த இலக்கை அடைகிறோம். எங்கள் பாடத்திட்டம் எங்கள் கூட்டு ஊழியங்கள் மூலம் பன்னிரண்டிற்கும் மேற்பட்ட மொழிகளில் மொழிபெயர்க்கப்படுகிறது. இந்த பாடத்திட்டத்தில் வரைகலை மூலம் இயக்கப்படும் காணொளி காட்சிகள், அச்சிடப்பட்ட கல்வி உபகரணங்கள் மற்றும் இணைய வழி கல்வி உபகரணங்கள் உள்ளன. இது இணைய வழியாகவும் நேரடியான கல்வி நிலையங்கள் மூலமாகவும் கற்றுக்கொடுப்பதற்கு   பள்ளிகள், குழுக்கள் மற்றும் தனிநபர்களால் பயன்படுத்தப்படும் பொருட்டு  வடிவமைக்கப்பட்டுள்ளது.

பல ஆண்டுகளாக, மிகச்சிறந்த உள்ளடக்கம் மற்றும் தரத்திற்கான விருது பெற்ற பல்லூடகவியல்  பாடங்களை உருவாக்கும் அதிக செலவு குறைந்த முறையை நாங்கள் உருவாக்கியுள்ளோம். எங்கள் எழுத்தாளர்கள் மற்றும் தொகுப்பாளர்கள் இறையியல் ரீதியாக பயிற்சி பெற்ற கல்வியாளர்கள் ஆவர், எங்கள் மொழிப் பெயர்ப்பாளர்கள் அவர்களின் சொந்த மொழிகளில் இறையியல் புலமை பெற்றவர்கள், மற்றும் எங்கள் பாடங்களில் உலகெங்கிலும் உள்ள நூற்றுக்கணக்கான மரியாதைக்குரிய பாடசாலை பேராசிரியர்கள் மற்றும் போதகர்களின் நுண்ணறிவு உள்ளது. இதனோடு கூட,

எங்கள் வரைகலை  வடிவமைப்பாளர்கள், விளக்குபவர்கள் மற்றும் தயாரிப்பாளர்கள் அதிநவீன உபகரணங்கள் மற்றும் நுட்பங்களைப் பயன்படுத்தி மிக உயர்ந்த உற்பத்தித் தரங்களை வழங்குகின்றனர்.

எங்கள் விநியோக இலக்குகளை நிறைவேற்றுவதற்காக, Thirdmill ஊழியமானது சபைகள், பாடசாலைகள், வேதாகம பள்ளிகள், மிஷனரி ஊழியர்கள், கிறிஸ்தவ ஒளிபரப்பாளர்கள் மற்றும் செயற்கைக்கோள் தொலைக்காட்சி வழங்குநர்கள் மற்றும் பிற அமைப்புகளுடன் திறம் சார்ந்த கூட்டாண்மைகளை உருவாக்கியுள்ளது. இந்த உறவுகள் ஏற்கனவே தனியாக ஊழியம் செய்கிற தலைவர்கள், போதகர்கள் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கு எண்ணற்ற காணொளி பாடங்களை விநியோகித்துள்ளன. எங்கள் வலைத்தளங்கள் விநியோகத்திற்கான வழிகளாக உள்ளன. மேலும் உங்கள் சொந்த கற்றல் சமூகத்தை எவ்வாறு தொடங்குவது என்பதற்கான பாட உபகரணங்களையும்  எங்கள் பாடங்களுக்கு கூடுதல் உபகரணங்களையும் வழங்குகின்றன.

Thirdmill ஊழியம் IRS என்கிற அமைப்பினால்  501(c)(3)  கழகமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. சபைகள், நிறுவனங்கள், வணிகங்கள் மற்றும் தனிநபர்களின் தாராளமான, வரி விலக்கு பெற்ற  பங்களிப்புகளை நாங்கள் சார்ந்து இருக்கிறோம். எங்கள் ஊழியத்தைப் பற்றிய கூடுதல் தகவலைப் பெறுவதற்கும் நீங்கள் எவ்வாறு ஈடுபடலாம் என்பதை அறிவதற்கும் தயவுசெய்து  www.thirdmill.org. யைப்  பார்வையிடவும்.

# பொருளடக்கம்


**முன்னுரை** ........ 1

**அமைப்பு மற்றும் உள்ளடக்கம்** ........ 2

**முற்பிதாக்களின் இசைவின்மை (ஆதியாகமம் 37:2-36)** ........ 4

சகோதரருக்கு எரிச்சலூட்டிய யோசேப்பு ........ 4

யோசேப்பை விற்ற சகோதரர்கள் ........ 6

**யோசேப்பின் அச்சுறுத்தும் ஆளுகை (38:1-41:57)** ........ 6

கானானில் யூதாவின் பாவம் (38:1-30) ........ 7

எகிப்தில் யோசேப்பின் வெற்றி (39:1-41:57) ........ 8

**ஒப்புரவாகுதலும், ஒன்றிணைதலும் (ஆதியாகமம் 42:1-47:12)** ........ 10

முதல் பிரயாணம் (ஆதியாகமம் 42:1-38) ........ 10

இரண்டாம் பிரயாணம் (ஆதியாகமம் 43:1-45:28) ........ 11

மூன்றாம் பிரயாணம் (ஆதியாகமம் 46:1-47:12) ........ 13

**யோசேப்பின் தயாளமுள்ள ஆளுகை (ஆதியாகமம் 47:13-27)** ........ 14

**முற்பிதாக்களின் இசைவு (ஆதியாகமம் 47:28-50:26)** ........ 14

யாக்கோபின் குடும்ப ஏற்பாடுகள் (ஆதியாகமம் 47:28-50:14) ........ 15

யோசேப்பின் குடும்ப ஏற்பாடுகள் (ஆதியாகமம் 50:15-26) ........ 16

**முக்கிய கருப்பொருள்கள்** ........ 18

**பொதுவாக வலியுறுத்தப்பட்டவை** ........ 18

இஸ்ரவேலின் மீதான தேவகிருபை ........ 19

தேவன் மீது இஸ்ரவேலர் கொண்டிருக்க வேண்டிய பற்று ........ 20

இஸ்ரவேலின் மீதான தேவனுடைய ஆசீர்வாதம் ........ 21

இஸ்ரவேலர் மூலமாக மற்றவர்களுக்குக் கிடைக்கும் தேவனுடைய ஆசீர்வாதங்கள் ........ 22

**சிறப்பு முக்கியத்துவம்** ........ 23

தேசிய ஒற்றுமை ........ 24

தேசிய வேற்றுமைகள் ........ 28

**முடிவுரை** ........ 34




வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

# முன்னுரை

ஏராளமான சொத்துள்ள குடும்பங்களில் பெரும்பாலும் சகோதரர்களுக்கிடையே யார் பெருமளவில் சுதந்தரத்தைப் பெற்றுக் கொள்வார்கள் என்பதில் போராட்டம் இருக்கும். குடும்பச் சொத்துக்களை ஒரு சந்ததியிலிருந்து அடுத்த சந்ததிக்குக் கொடுக்க வேண்டிய நேரம் வரும்போது, முன்பு ஒருவருக்கொருவர் சிநேகமாக இருந்துவந்த சகோதர சகோதரிகளும் கூட, தேவனால் மட்டுமே அவர்களுக்கிடையேயான அன்பின் பிணைப்புகளை மீண்டும் உருவாக்க முடியும் என்ற அளவிற்குப் பிரிந்துவிடுகிறார்கள். இஸ்ரவேலரின் முற்பிதாக்களான யோசேப்பு மற்றும் அவருடைய சகோதரர்களுடைய குடும்பத்திலும் அப்படியேதான் நடந்தது என்று ஆதியாகம புத்தகம் கூறுகிறது. தங்கள் தகப்பனாகிய யாக்கோபின் சுதந்தரத்தைக் குறித்த அவர்களின் பகை தீர்க்கவே முடியாத அளவிற்கு மிகவும் கசப்பானதாயிற்று. ஆனால், நாம் இந்தப் பாடத்தில் பார்க்கவிருக்கிறபடி, தேவன் யோசேப்பையும் அவருடைய சகோதரரையும் ஒப்புரவாகச் செய்து, அவர்களுக்கிடையே மீண்டும் அன்பின் பிணைப்பை ஏற்படுத்தினார். இந்தத் தீர்வு, பழைய ஏற்பாடு முழுவதும் இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரங்களுக்குள் இருந்த உறவிற்கு ஒரு வழிமுறையை உண்டாக்கியது. அது இன்றும் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர்களுக்கு இடையேயான உறவுகளை வழிநடத்துகிறது.

பஞ்சாகமங்கள் பற்றிய இந்தப் பாடம், “யோசேப்பும் சகோதரரும்” பற்றிய ஆதியாகம புத்தகத்தின் பகுதிக்கென்று ஒதுக்கப்பட்டுள்ளது. இதில், ஆதியாகமம் 37:2-50-26 பகுதியிலுள்ள யோசேப்பு தன் சகோதரர்களுடன் கொண்டிருந்த பிரச்சனையான உறவைப் பற்றி விபரமாகப் பார்ப்போம்.

நம்முடைய முக்கியத் தலைப்பைப் பற்றி பார்க்கும் முன்னர் ஆதியாகம புத்தகத்தின் அடிப்படை பொருளடக்கத்தை மீண்டும் பார்ப்பது உதவியாக இருக்கும். ஆதியாகமம் மூன்று முக்கிய பகுதிகளாகப் பிரிகிறது என்று முந்தைய பாடங்களில் படித்தோம். ஒவ்வொரு பகுதியும் மோசேயின் ஆதி இஸ்ரவேல் வாசகர்களிடம் குறிப்பிட்ட விதங்களில் பேசும்படி அமைக்கப்பட்டிருந்தன. ஆதியாகமம் 1:1-11:9 வசனங்களைக் கொண்ட முதல் பகுதி ஆதி கால வரலாறு பற்றியது. இப்பகுதியில், இஸ்ரவேலரின் கானானிய அழைப்பு தேவன் உலக சரித்திரத்தின் ஆரம்பக் காலக்கட்டங்களில் செய்து முடித்திருந்தவற்றின் அடிப்படையில் ஏற்படுத்தப்பட்டது என்று மோசே காண்பித்திருந்தார். ஆதியாகமம் 11:10-37:1 வசனங்களைக் கொண்ட இரண்டாம் பகுதி ஆதி முற்பிதாக்களின் கதையை பதிவு செய்திருக்கிறது. இங்கு, இஸ்ரவேலர் வாக்குத்தத்த தேசத்திற்குப் போகும் வழியில் சந்திக்கும் பிரச்சனைகளை ஆபிரகாம், ஈசாக்கு, மற்றும் யாக்கோபின் வாழ்க்கை எப்படி



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

உணர்த்துகிறது என்று மோசே காண்பித்திருக்கிறார். பிற்கால முற்பிதாக்களின் சரித்திரத்தைக் கொண்ட மூன்றாம் பகுதி, ஆதியாகமம் 37:2-50:26 இல், யோசேப்பு மற்றும் அவருடைய சகோதரரின் கதையைச் சொல்கிறது. நம்முடைய பாடத்தில் ஆதியாகமத்தின் இந்தக் கடைசிப் பகுதியில் கவனம் செலுத்தவிருக்கிறோம்.

நாம் பார்க்கவுள்ளபடி, ஆதியாகமத்தின் இப்பகுதியைப் பற்றி மோசே கொண்டிருந்த நோக்கத்தில் அவருடைய ஆதி வாசகர்களுக்கு எண்ணற்ற பாடங்கள் இருந்தன. ஆனால், பொதுவாக,

> யோசேப்பையும், அவருடைய சகோதரரையும் குறித்த கதை, இஸ்ரவேல் கோத்திரங்கள் வாக்குத்தத்த தேசத்தை சுதந்தரித்து அதில் குடியேறும்போது எவ்வாறு இசைந்து வாழ வேண்டும் என்பதை அவர்களுக்குப் போதித்தன.

யோசேப்பையும் அவருடைய சகோதரரையும் குறித்த நம் பாடத்தை இரண்டு முக்கிய பகுதிகளாகப் பிரித்திருக்கிறோம். முதலில், இந்த அதிகாரங்களின் அமைப்பு மற்றும் பொருளடக்கத்தையும், அவற்றின் இலக்கிய அமைப்பும், கருத்துக்களும் எப்படி ஒன்றுடன் ஒன்று கைகோர்த்துச் செல்கின்றன என்பதையும் ஆய்வு செய்வோம். இரண்டாவதாக, இஸ்ரவேல் கோத்திரங்களுக்காக மோசே வலியுறுத்திய எண்ணற்ற முக்கிய கருப்பொருள்களையும், அக்கருப்பொருள்கள் எவ்வாறு நவீன கிறிஸ்தவர்களுக்குப் பொருந்துகின்றன என்றும் பார்ப்போம். யாக்கோபுடைய கதையின் அமைப்பு மற்றும் பொருளடக்கத்திலிருந்து தொடங்குவோம்.

# அமைப்பு மற்றும் உள்ளடக்கம்

யோசேப்பையும், அவரது சகோதரரையும் பற்றிய கதையை அறிந்த எல்லோருக்கும் அதில் பலதரப்பட்ட கதாபாத்திரங்களும், வெவ்வேறு கலாச்சார அமைப்புகளும், பல உபத்திட்டங்களும் இருப்பதை அறிவார்கள். இதிலுள்ள விபரங்களை மனதில் கொண்டு, அவற்றை தாங்கிப் பிடித்திருக்கும் இலக்கிய அமைப்பை கவனியாமல் விட்டுவிடும் அளவிற்கு இவ்வசனங்கள் சிக்கலானவையாக உள்ளன. ஆனால், இவ்வதிகாரங்களின் அமைப்பும், பொருளடக்கமும் எவ்வாறு இணைந்து செயல்படுகின்றன என்பதில் கவனம் செலுத்துவது குறிப்பாக முக்கியமானது, ஏனென்றால் யோசேப்பையும், அவரது சகோதரரையும் பற்றிய பதிவு மிகவும் ஒருங்கிணைந்த ஒரு நாடகமாக விளங்குகிறது.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

ஆதியாகமம் 37:2-50-26-ஐ மோசே வழங்கியிருக்கும் விதம் அதிகமாக ஒருங்கிணைந்த ஒரு ஐந்து-படி நாடகமாக உள்ளது:

- ஆதியாகமம் 37:2-36 இல் உள்ள கதையின் ஆரம்ப பிரச்சனை, யோசேப்பு பிற்காலத்தில் ஆளுகை செய்வார் என்பதை ஏற்றுக் கொள்ள முடியாத முற்பிதாக்களின் இசைவின்மையை சித்தரிக்கிறது.
- 38:1-41:57 லிலுள்ள இரண்டாம் படி அல்லது உயரும் செயல்பாடு, யோசேப்பின் அச்சுறுத்தும் ஆளுகையில் – அதாவது எகிப்தில் அவர் அதிகாரத்திற்கு உயர்ந்ததில் – கவனம் செலுத்துகிறது.
- மூன்றாம் படியான 42:1-47:12, இந்நாடகத்தின் திருப்புமுனையாக அமைந்துள்ளது.  அது, முற்பிதாக்கள் எகிப்தில் ஒப்புரவாகி இணைவதைப் பற்றியது.
- நான்காம் படியான 47:13-27 வசனங்கள், எகிப்தில் யோசேப்பின் தயாளமான ஆளுகையை அறிவிக்கும் வீழும் செயல்பாடாக இருக்கின்றது.
- நாடகத்தின் இறுதித் தீர்வாகிய 47:28-50:26 வசனங்கள், யோசேப்பின் ஆளுகையின் கீழ் முற்பிதாக்கள் இசைவாக வாழ்ந்ததை விவரிக்கிறது.

சமீப காலங்களில், ஆதியாகமத்தின் இந்த அதிகாரங்கள் ஒரு விரிவான மையநோக்கு முரண்தொடர் அணிநயத்தை உருவாக்குகின்றன என்று காண்பிக்க எண்ணற்ற மொழிப்பெயர்ப்பாளர்கள் முயற்சி செய்திருக்கிறார்கள். முரண்தொடர் அணிநயம் என்பது:

> முரண்தொடர் அணிநயம் என்பது ஒரு மையப்பகுதிக்கு முன்னும் பின்னும் உள்ள பகுதிகள் ஒன்றுக்கொன்று இணையாக அல்லது சமநிலையில் இருக்கும் இலக்கிய அமைப்பு ஆகும்.

பெரும்பாலான இம்முயற்சிகள் இந்தக் கண்ணோட்டத்தை மிக அதிகமாக வலியுறுத்துகின்றன. ஆனால், அவை யோசேப்பு மற்றும் அவருடைய சகோதரர்களைப் பற்றிய முழுப் பதிவிற்கும் ஒரு இசைவைக் கொடுக்கும்படி பெரிய அளவிலான சமச்சீரைக் கொண்டுள்ளன என்பதை நோக்கியே இருக்கின்றன.

பொதுவாக, இந்தப் பதிவு முற்பிதாக்களிடையே இருந்த இசைவின்மையில் தொடங்கி, நாடகத்தின் இறுதித் தீர்வில் அவர்கள் ஒன்றாகிவிடுவதுடன் நிறைவடைகிறது என்பதைக் காண்பது கடினமல்ல.

எகிப்தில் யோசேப்பு அச்சுறுத்தும் விதத்தில் ஆளுகை செய்ததைக் குறிக்கும் உயரும் செயல்பாடு, எகிப்தில் அவர் தயாளத்துடன் ஆளுகை செய்த வீழும் செயல்பாட்டை சமநிலைப்படுத்துகிறது. இசைவின்மை மற்றும்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

அச்சுறுத்தலிலிருந்து தயாளம் மற்றும் இசைவிற்கு மாறுவதில் ஏற்பட்ட திருப்புமுனை அல்லது கீல்முனை, எகிப்தில் நடந்த ஒப்புரவாகுதலும், மீண்டும் இணைவதும் ஆகும். இந்தப் பகுதிகளை நாம் மோசே வழங்கியிருக்கும் அதே வரிசையில் காண்போம். ஆனால், இந்த அடிப்படை நாடக சமச்சீரை விளங்கிக் கொள்வது, யோசேப்பு மற்றும் சகோதரரின் கதையிலுள்ள எண்ணற்ற விபரங்களை ஆய்வு செய்வதற்கு உதவியாக இருக்கும்.

யோசேப்பு மற்றும் சகோதரரின் கதை ஆதியாகமத்தின் வேறெந்த பகுதியையும் விட அதிகக் கடினமான இலக்கிய நடையைக் கொண்டுள்ளது. கதாபாத்திரங்களின் நீண்டதொரு பட்டியலைக் கொண்ட இப்பகுதி, அவற்றில் பெரும்பாலானவற்றை மாறுகிற முப்பரிமாண கதாபாத்திரங்களாகச் சித்தரிக்கிறது. காட்சிகள் மிகத் தெளிவாகக் காண்பிக்கப்பட்டுள்ளன. வேடிக்கையான முரண்பாடுகளும், நகைச்சுவையும், சோகங்களும் கதை முழுவதும் மாறி மாறி வருகின்றன. கதையில், மற்ற சம்பவங்களை நினைவுபடுத்துகிற மற்றும் எதிர்பார்க்கச் செய்கிற எதிர்பாராத பல திருப்பங்கள் ஏற்படுகின்றன. இப்படியிருக்க, ஆதியாகமத்தின் இப்பகுதியைப் பற்றி இந்தப் பாடத்தில் நாம் ஆய்வு செய்வதை விட அதிகமான விஷயங்களை மனதில் கொள்ளுமாறு ஆதி இஸ்ரவேல் வாசகர்கள் அழைக்கப்பட்டிருக்கலாம். ஆகவே, நமக்கிருக்கும் நேரத்தில், ஒவ்வொரு அதிகாரத்தையும் பற்றிய ஒருசில விமர்சனங்களை மட்டும் பார்ப்போம்.

## முற்பிதாக்களின் இசைவின்மை (ஆதியாகமம் 37:2-36)

மோசே ஆதியாகமம் 37:2-36 இல், யோசேப்பின் எதிர்கால ஆளுகையைக் குறித்து முற்பிதாக்களிடையே ஏற்பட்ட இசைவின்மை என்னும் ஆரம்ப தத்ரூப பிரச்சனையுடன் தொடங்குகிறார். இந்த ஆரம்ப அதிகாரம், யோசேப்பின் குடும்பத்தில் இருந்த அந்த இசைவின்மை எவ்வாறு காலப்போக்கில் மிக மோசமாக மாறியது என்பதைக் காண்பிக்கும் இரண்டு பகுதிகளைக் கொண்டுள்ளது. 37:2-11 –லுள்ள முதல் பகுதி, யோசேப்பு எவ்வாறு தொடர்ந்து தன் சகோதருக்கு எரிச்சலூட்டினார் என்பதைக் கூறுகிறது. 12-36 –லுள்ள இரண்டாம் பகுதி, சகோதரர்கள் எவ்வாறு யோசேப்பை அடிமையாக விற்றுப் போட்டார்கள் என்பதைப் பற்றிச் சொல்கிறது. யோசேப்பு தன் சகோதரருக்கு எரிச்சலூட்டிய விதத்தைப் பற்றிப் பார்ப்போம்.

### சகோதரருக்கு எரிச்சலூட்டிய யோசேப்பு

முதலில், யோசேப்பைத் தன் தகப்பனின் தயவைப் பெற்ற அறியாத இளம் வாலிபனாக மோசே சித்தரிக்கிறார். உதாரணமாக, 3 ஆம் வசனத்தில், யாக்கோபு யோசேப்புக்கு ஒரு பலவருண அங்கியைக் கொடுத்தார், அதனால் அவரது சகோதரர்கள் அவர் மேல் பொறாமை கொண்டார்கள். “அவனோடே



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

பட்சமாய்ப் பேசாமல் அவனைப் பகைத்தார்கள்” என்று 4 ஆம் வசனம் சொல்கிறது. மற்றும், இரு சிறு பகுதிகளில், யோசேப்பு எதிர்காலத்தில் தன் குடும்பத்தாரை விட தான் உயர்த்தப்படப் போவதைப் பற்றிய தன் சொப்பனத்தைக் குறித்து பெருமைப்பட்டுக் கொண்டது நிலைமையை மேலும் மோசமாக்கியது. இதனால், 5 மற்றும் 6 ஆம் வசனங்களில், யோசேப்பின் சகோதரர் அவனை “இன்னும் அதிகமாய்ப் பகைத்தார்கள்” என்று மோசே எழுதியிருக்கிறார். “அவன் சகோதரர் அவன்மேல் பொறாமை கொண்டார்கள்” என்று 11 ஆம் வசனம் சொல்கிறது.

> யோசேப்புக்கும் அவருடைய சகோதரருக்கும் இடையே இசைவில்லாமல் போனதற்குக் காரணம்... இதற்கு என்னால் இரு காரணங்களைச் சொல்ல முடியும். முதலாவது, அவனுடைய தகப்பன் அவனுக்கு மிக அழகிய ஒரு அங்கியைச் செய்வித்தான், அந்த அங்கியைப் பார்த்த மற்ற சகோதரர்கள், “ஒ, அது என்னிடம் இருக்க வேண்டுமென்று நினைக்கிறேன், அது என்னுடையதாக வேண்டும்” என்று சொன்னார்கள். நம்மை நாமே பார்க்கும்போது, இந்தச் சமூகத்தில் சிலர் மிகச் சிறப்பாக வாழ்வதால் சமூகத்திலும் இசைவில்லாமல் போகிறது. இசைவில்லாமல் இருக்கும் சிலர், “நான் ஏன் அவரைப் போல இல்லை?” என்று தன்னைத்தானே கேட்டுக் கொள்கிறார். இதனை சபையிலும் காணலாம். சிலர் வியாதியுடனும், மற்றும் சிலர் ஆரோக்கியமாகவும் இருப்பதைப் பார்த்து, “ஏன் நாமும் ஆரோக்கியமாக இருக்க முடிவதில்லை?” என்று நம்மை நாமே கேட்டுக் கொள்கிறோம். ஆகவே, மற்றவர்களுக்கு இல்லாத சிறப்பான ஒன்றை யோசேப்புக்குக் கொடுத்தபோது அங்கு இசைவின்மை உண்டானது. இரண்டாவது: மனித இயல்பின் நொறுங்கிய நிலை. தங்கள் சகோதரனுக்கு சிறப்பான ஒன்று, அதாவது அவர்களுக்குக் கிடைத்ததை விட அழகிய உடை கிடைத்ததால் மற்ற சகோதரர்கள் பொறாமை கொண்டார்கள். பொறாமையின் விதை நம் அனைவருக்குள்ளுமே இருக்கிறது. அந்தச் சகோதரருக்குள் மட்டுமல்ல, நமக்குள்ளும் உள்ளது. ஆனால், கிறிஸ்தவர்களாகிய நாம் அதை முதலில் அடையாளம் கண்டு, பொறாமை ஒரு பாவம் என்று அறிந்து, அதனை விட்டுவிட வேண்டும்.
>
> – Rev. Dr. சைப்ரியன் கே. குஷியெண்டா



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

யோசேப்பு தன் சகோதரருக்கு எரிச்சலூட்டியபோது முற்பிதாக்களுக்கிடையே உண்டான இசைவின்மையைப் பற்றிக் கூறிய பின்னர் மோசே 37:12-36 –லுள்ள இரண்டாம் பகுதிக்குத் திரும்புகிறார். இவ்வசனங்கள், சகோதரர்கள் எவ்வாறு யோசேப்பை அடிமையாக விற்றார்கள் என்பதை விளக்கும் ஒரு சிறு பகுதியாக உள்ளன.

## யோசேப்பை விற்ற சகோதரர்கள்

சகோதரர்கள் யோசேப்பைப் பிடித்து, அவருடைய பலவருண அங்கியைக் களைந்து, அவரைக் கொல்லத் திட்டமிட்டார்கள். யோசேப்பைத் தப்புவிக்க மூத்த சகோதரனான ரூபன் எடுத்த முயற்சிகள் வீணாகிவிட்டன. ஆனால் முடிவில், யோசேப்பைக் கொல்லாமல், அடிமையாக விற்றுப் போடலாம் என்று யூதா மற்றவர்களை ஒப்புக்கொள்ள வைத்தான். யோசேப்பை ஒரு காட்டு மிருகம் விழுங்கிவிட்டது என்று சகோதரர் யாக்கோபுக்குக் கொடுத்த சோகமான மற்றும் வஞ்சகமான அறிக்கையுடன் இப்பகுதி நிறைவு பெறுகிறது. சகோதரர்கள் யோசேப்பின் இரத்தக்கறை படிந்த ஆடையை யாக்கோபிடம் கொடுத்தார்கள். யாக்கோபு மிகவும் துக்கப்பட்டார்.

இவ்விரு பகுதிகளும் யோசேப்பு மற்றும் சகோதரரைக் கொண்ட முழுக் கதையையும் அமைக்கும் தத்ரூபமான ஒரு பிரச்சனையை அறிமுகப்படுத்துகின்றன. இஸ்ரவேலின் கோத்திரப்பிதாக்களிடையே எழுந்த சோகமான இசைவின்மையின் துவக்கம் இதுவே.

யோசேப்பின் எதிர்கால ஆளுகையைக் குறித்து முற்பிதாக்களிடையே உண்டான இசைவின்மை என்னும் ஆரம்பப் பிரச்சனைக்குப் பிறகு, மோசே இரண்டாம் நிலைக்குத் திரும்புகிறார். 38:1-41:57 இல் மோசே யோசேப்பின் அச்சுறுத்தும் ஆளுகையின் துவக்கத்தைப் பற்றிக் கூறுகிறார்.

# யோசேப்பின் அச்சுறுத்தும் ஆளுகை (38:1-41:57)

இந்நிலையில், இக்கதையிலுள்ள கதாபாத்திரங்கள் கொண்டிராத சில நுணுக்கங்களை தத்ரூபமான ஒரு முரண்பாட்டைப் பயன்படுத்தி மோசே தன் வாசகர்களுக்குக் கொடுக்கிறார். முதலில், இங்கு யூதாவின் பெயரில் குறிப்பிடப்படும் யோசேப்பின் சகோதரர்கள் கானானில் வசித்து வந்தனர். அவர்கள், யோசேப்பு தங்கள் மீது ஆளுகை செலுத்துவதைத் தடுத்துவிட்டோம் என்ற நம்பிக்கையில் இருந்தது போலத் தெரிகிறது. ஆனால், மற்ற கதாபாத்திரங்களுக்குத் தெரியாமல் தூரதேசமான எகிப்தில் யோசேப்பின் ஆளுகை அதிகரித்துக் கொண்டிருந்தது. தேவன் யோசேப்பின் அடிமைத்தனத்தை அவருடைய குடும்பத்தினருக்கு மேலாக அவரை உயர்த்துவதற்கான பாதையாக மாற்றினார்.

யோசேப்பின் அச்சுறுத்தும் ஆளுகை இரு முக்கிய பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது. முதல் பகுதியான 38:1-30 வசனங்கள் கானானில் யூதா



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

தாமாருடன் பாவம் செய்ததை விவரிக்கிறது. அதன் பின்னர், 39:1-41:57 வசனங்களில், எகிப்தில் யோசேப்பின் வெற்றியைக் குறித்து அறிகிறோம். கானானில் யூதா பாவம் செய்ததைக் குறித்து முதலில் பார்ப்போம்.

## கானானில் யூதாவின் பாவம் (38:1-30)

யூதா இந்த அதிகாரத்தின் மையப் பகுதிக்கு முன்னேறிச் சென்றிருக்கிறார், ஏனெனில் ரூபன் அல்ல, இவரே முந்தைய பகுதியில் தன் சகோதரர்கள் யோசேப்பைக் கொன்று போடாமல் காப்பாற்றினார். ஆகவே, இந்தப் பகுதி, தன் சகோதரருக்குள் மிக உயர்ந்த நிலையில் இருந்த யாக்கோபின் குமாரனைப் பற்றியதாக உள்ளது. கானானில் யூதா செய்த பாவத்தைப் பற்றிய பகுதி, 38:1-5 இல் யூதாவுடைய குமாரர்களின் பிறப்பைப் பற்றிய விபரத்துடன் தொடங்குகிறது. யூதா ஒரு கானானியப் பெண்ணை மணந்தார் என்று சொல்லும் 2 ஆம் வசனத்திலேயே நெறிமுறை தவறியது குறிப்பிடப்படுகிறது.

6-11 வசனங்களில், யூதாவின் குமாரர்கள் மற்றும் தாமாரைப் பற்றிய பதிவைக் காணலாம். முதலில், யூதா தன் மூத்த மகனான ஏருக்கு தாமாரை மணம் செய்து கொடுத்தான். ஏர் மரித்த பின்னர் யூதா தாமாரை தன் இரண்டாம் மகனாகிய ஓனானுக்குக் கொடுத்தான். பிள்ளையற்ற விதவையை கணவனின் சகோதரன் மணந்து கொள்ளும் வழக்கம் உபாகமம் 25:5-10 இல் கட்டளையாகக் கொடுக்கப்பட்டுள்ளது. இவ்வழக்கம், மரித்த சகோதரனுடைய வம்சத்தைக் காக்கும் உத்தரவாதம் கொடுத்ததோடு, விதவையான அவனுடைய மனைவியையும் பாதுகாப்பதாக இருந்தது. ஆனால், 9-ஆம் வசனத்தில், ஓனான் தாமாருக்கு பிள்ளை கொடுக்க மறுத்துவிட்டான். ஆகவே, 10-ஆம் வசனத்தில், தேவன் ஓனானை அழித்தார். யூதா தன் மூன்றாம் மகனாகிய சேலாவுக்கும் இதே கதி நேரிடுமோ என்று பயந்தான். ஆகவே, அவன் தாமாரை மணக்க யூதா அனுமதிக்காமல், அவமானத்தில் தாமாரை அவளுடைய தகப்பன் வீட்டிற்கு அனுப்பிவிட்டான்.

12-26 வசனங்களில், தாமார் யூதாவை மயக்கியதைப் பற்றி வாசிக்கிறோம். தாமார் தான் சேலாவுக்குக் கொடுக்கப்படப் போவதில்லை என்பதை அறிந்தபோது, ஒரு வேசியைப் போல வேஷம் மாறி, யூதாவை மயக்கினாள். யூதா தனக்குக் கொடுக்க வேண்டிய தொகைக்கு பதிலாக அவனுடைய முத்திரை மோதிரத்தையும், ஆரத்தையும், கைக்கோலையும் கொடுக்க வேண்டுமென்று தந்திரமாக அவனிடம் கேட்டு வாங்கிக் கொண்டாள். மூன்று மாதங்களுக்குப் பின்னர், 24-26 வசனங்களில், தாமார் கர்ப்பவதியானதை கேள்விப்பட்ட யூதா, மிகுந்த ஆத்திரமடைந்து அவள் கொல்லப்பட வேண்டுமென்று ஆணையிட்டான். ஆனால், தாமாரோ யூதா தனக்குக் கொடுத்த முத்திரை மோதிரத்தையும், ஆரத்தையும், கைக்கோலையும் கொடுத்தனுப்பினாள். யூதா தான் செய்ததை உணர்ந்தபோது, தன் தவறை ஒப்புக் கொண்டான். ஆதியாகமம் 38:26 இல் யூதா சொல்வதைக் கவனியுங்கள்:



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> என்னிலும் அவள் நீதியுள்ளவள்; அவளை என் குமாரனாகிய சேலாவுக்குக் கொடாமற்போனேனே (ஆதியாகமம் 38:26).

இந்த வசனம் குறிப்பிடுவது போல, முற்பிதாவாகிய யூதா தன் பாவம் தாமார் செய்த எதையும் விட மிக மோசமானது என்பதை ஒப்புக் கொண்டான். தாழ்மையாக பாவத்தை அறிக்கையிட்டு, மனந்திரும்பியதற்கு அவன் ஒரு முன்மாதிரியாக விளங்கினான். இந்த மனமாற்றத்தின் விளைவாக, தாமாருக்கு விரோதமாக யூதா செய்த பாவத்தைப் பற்றிய கதை நல்ல விதமாக நிறைவடைகிறது. யூதாவுக்கு கானானியப் பெண் பெற்ற குமாரரைப் பற்றிய விபரத்துடன் தொடங்கிய இப்பகுதியை, 27-30 வசனங்களில் யூதாவுக்கு தாமார் பெற்ற குமாரர்களைப் பற்றிய விபரத்துடன் மோசே நிறைவு செய்கிறார். பேரேஸ் மற்றும் சேரா என்னும் பெயர்கள் யூதா கோத்திரத்தில் முக்கியத்துவம் வாய்ந்தவையாக மாறின.

கானானில் யூதா பாவம் செய்ததைப் பற்றிய சம்பவங்களை மனதில் கொண்டு, யோசேப்பின் அச்சுறுத்தும் ஆளுகையைப் பற்றிய இரண்டாம் பகுதிக்குத் திரும்புவோம். ஆதியாகமம் 39:1-41:57 –லுள்ள இந்தப் பகுதி எகிப்தில் யோசேப்பு பெற்ற வெற்றியைப் பற்றிய நீண்ட பதிவாக உள்ளது.

## எகிப்தில் யோசேப்பின் வெற்றி (39:1-41:57)

இப்பிரிவு மூன்று முக்கிய பகுதிகளாகப் பிரிகிறது. 39:1-23 வசனங்கள் கொண்ட முதல் பகுதி, யோசேப்பு போத்திபாரின் வீட்டிலிருந்து சிறைச்சாலைக்குச் சென்றதைப் பற்றியது. யோசேப்பு எகிப்துக்குச் சென்றவுடனேயே போத்திபாரின் கண்களில் தயை பெற்று அவனுடைய வீட்டிற்கு அதிபதியானான். ஆனால், போத்திபாரின் மனைவியோ யோசேப்பை மயக்க முயற்சி செய்தாள். அவள் அதில் தோல்வியுற்றபோது, யோசேப்பு தன்னிடம் தவறாக நடந்து கொண்டதாக குற்றஞ்சுமத்தினாள். யோசேப்பு ஏற்கனவே பலமுறை அவளுடைய முயற்சிகளைத் தடுத்திருந்தாலும், போத்திபார் தன் மனைவியின் தவறான குற்றச்சாட்டுகளையே நம்பினான். அதனால் அவன் யோசேப்பை பார்வோனின் சிறைக்கு அனுப்பினான், அங்கு யோசேப்பு மிக விரைவில் சிறைச்சாலை அதிகாரியின் நம்பிக்கைக்குப் பாத்திரவானானான். இந்தப் பகுதி யூதா தாமாருடன் பாவம் செய்த பகுதியைத் தொடர்ந்து வருவதால், யூதாவின் ஒழுக்கக் கேட்டிற்கும், யோசேப்பின் ஒழுக்கத் தூய்மைக்கும் இடையேயான முரண்பாட்டைத் தெளிவாகக் காண்பிக்கிறது.

> யூதா மற்றும் தாமார் கதையை நான் படித்தபோது, அந்தக் கதையை மட்டும் வெட்டி எடுத்து வேறு இடத்தில் வைக்க வேண்டும் என்று தோன்றியது. இருப்பினும், உண்மையில் அந்தச் சூழலை நீங்கள் வாசிக்கும்போது, யோசேப்பின் கதையைத் தொடங்கிய பின்னர், நடுவில் தேவன் ஏன் அந்தக்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> கதையை வைத்தார் என்பதைச் சரியாகப் புரிந்து கொள்வீர்கள். தேவன் அநீதியான ஒருவனுக்கும், நீதிமானுக்கும் இடையேயான முரண்பாட்டைக் காண்பிக்க விரும்பியதாலேயே அப்படி வைத்திருப்பார் என்று நினைக்கிறேன். யோசேப்பு போத்திபாருடைய மனைவியின் பாலியல் சோதனைகளை எதிர்க்க முன்வந்தான். யூதாவோ விரும்பி வேசித்தனத்தில் ஈடுபட்டான், அது ஒருவேளை மதரீதியான புனித ஸ்தல வேசித்தனமாகக் கூட இருக்கலாம். அதனால் இங்குள்ள முரண்பாட்டைக் காண்கிறீர்கள், அதோடு, யோசேப்பு முதல் பேறானவனாக இல்லாதபோதும், அவனே தன் குடும்பத்தை நீதியின் பாதையில் நடத்தப் போகிறான் என்பதால், அவனுக்கு தேவன் முதல்பேறானவனுக்கு உரிய இரண்டு மடங்கு ஆசீர்வாதத்தைக் கொடுக்கவிருந்தார்.
>
> – Dr. ஸ்டீஃபன் ஜே. ப்ராமர்

40:1-41:45 வசனங்களைக் கொண்ட இரண்டாம் பகுதியில், யோசேப்பு சிறையிலிருந்து பார்வோனின் அரண்மனைக்குச் செல்கிறார். இந்தப் பகுதியில், யோசேப்பு பார்வோனின் அரண்மனையில் வேலை செய்தவர்களின் சொப்பனங்களுக்கு விளக்கம் கொடுத்து எப்படி அதிகாரத்திற்கு உயர்த்தப்பட்டார் என்று மோசே விளக்கியுள்ளார். பின்னர், யோசேப்பு ஏழு வருட செழிப்பு மற்றும் ஏழு வருட பஞ்சம் பற்றிய பார்வோனின் சொப்பனத்திற்கும் அர்த்தம் சொல்கிறார்.

41:46-57 வசனங்களைக் கொண்ட மூன்றாம் பகுதியில், யோசேப்பு பார்வோனின் அரண்மனையில் ஆளுகை செய்ததை மோசே சுருக்கமாகக் குறிப்பிட்டிருக்கிறார். இந்தப் பகுதியில், யோசேப்பு பார்வோனுக்கு அடுத்த நிலையில், எகிப்தில் அதிகாரம் செலுத்திய பல விதங்களைப் பற்றிச் சொல்கிறார். யோசேப்பின் வெற்றியைக் குறித்த ஒவ்வொரு பகுதியிலும், யோசேப்பு தன் சொந்த புத்திக்கூர்மையால் அல்ல, மாறாக தேவனுடைய கரத்தினாலேயே அதிகாரத்திற்கு உயர்ந்தார் என்பதை மோசே தெளிவுபடுத்துகிறார்.

யோசேப்பின் எதிர்கால ஆளுகையைக் குறித்த முற்பிதாக்களின் இசைவின்மையையும், எகிப்தில் யோசேப்பின் அச்சுறுத்தும் ஆளுகையையும் ஆய்வு செய்த நாம், கதையின் மையத் திருப்புமுனையைப் பார்ப்பது அவசியம், அது ஆதியாகமம் 42:1-47:12 வசனங்களில் உள்ள 'எகிப்தில் முற்பிதாக்களின் ஒப்புரவாகுதலும், ஒன்றிணைதலும்' பற்றிய பதிவாகும்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

# ஒப்புரவாகுதலும், ஒன்றிணைதலும் (ஆதியாகமம் 42:1-47:12)

ஒப்புரவாகுதலும், ஒன்றிணைதலும் பற்றிய இந்த மைய விபரம் யோசேப்பின் குடும்பத்தார் கானானிலிருந்து எகிப்திற்கு மேற்கொண்ட மூன்று மிக நெருங்கிய தொடர்புடைய பிரயாணங்களைக் கொண்டுள்ளது. முதல் பிரயாணம் ஆதியாகமம் 42:1-38 இல் காணப்படுகிறது. இரண்டாம் பிரயாணம் ஆதியாகமம் 43:1–45:28 இல் காணப்படுகிறது. மற்றும் மூன்றாம் பிரயாணம் ஆதியாகமம் 46:1–47:12 இல் காணப்படுகிறது. முதல் பிரயாணத்தை முதலில் பார்ப்போம்.

## முதல் பிரயாணம் (ஆதியாகமம் 42:1-38)

முதல் பிரயாணம் மூன்று பிரயாணங்களில் எளிமையான ஒன்றாகும், அதனை மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம். 42:1-5 வுள்ள முதல் பிரிவில், சகோதரர்கள் மகா கொடிய பஞ்சத்தினால் கானானிலிருந்து எகிப்திற்குச் சென்றார்கள். இந்தப் பிரிவில், பென்யமீனைத் தவிர யோசேப்பின் சகோதரர்கள் அனைவரையும் தானியம் கொள்ளும்படி யாக்கோபு எகிப்திற்கு அனுப்பினார்.

42:6-28 –வுள்ள இரண்டாம் பிரிவு, யோசேப்பு முதன்முதலில் தன் சகோதரர்களை அடையாளம் கண்டு கொண்டபோது எகிப்தில் நடந்த சம்பவங்களைப் பற்றியது. யோசேப்பு தன்னை வெளிப்படுத்தாமல், பென்யமீனை அழைத்து வரும்படித் தன் சகோதரரை கானானுக்கு அனுப்பியதன் மூலம் அவர்களின் குணத்தை சோதித்தார். முதலில், பென்யமீன் எகிப்திற்கு வரும் வரை ஒருவனைத் தவிர மற்ற சகோதரர்களை சிறையில் வைப்பதாக யோசேப்பு பயமுறுத்தினார். அதன் விளைவாக, சகோதரர்கள் தாங்கள் செய்த தவறுக்கு கணக்குக் கொடுக்கும் நேரம் வந்துவிட்டதாக உணர்ந்தனர். 42:21 இல், அவர்கள் ஒருவரையொருவர் நோக்கி, “நம்முடைய சகோதரனுக்கு நாம் செய்த துரோகம் நம்மேல் சுமந்தது” என்று சொல்லிக் கொண்டார்கள். மூன்று நாட்களுக்குப் பின்னர், பென்யமீனை அழைத்து வரும்படி சொல்லி யோசேப்பு சிமியோனைத் தவிர மற்ற எல்லோரையும் அனுப்பிவிட்டார். அவர்களுடைய சாக்குகளில் தானியத்தையும், தானியம் வாங்க அவர்கள் கொண்டு வந்த பணத்தையும் வைக்குமாறு ஆணையிட்டார். சகோதரர்கள் திரும்பவும் பிரயாணப்பட்டபோது, அவர்களில் ஒருவன் தன் பையில் பணம் இருப்பதைக் கண்டான். 28 ஆம் வசனத்தில், சகோதரர்கள் பயத்துடன் ஆச்சரியப்பட்டு, “தேவன் நமக்கு இப்படிச் செய்தது என்ன?” என்று கேட்டுக் கொண்டார்கள்.

29-38 வசனங்களைக் கொண்ட மூன்றாம் பிரிவு, சகோதரர்கள் கானானுக்குத் திரும்பியபோது என்ன நடந்தது என்று விவரிக்கிறது. அவர்கள்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

தங்களுடன் பென்யமீனையும் எகிப்திற்கு அனுப்புமாறு தங்கள் தகப்பனிடம் வருந்திக் கேட்டுக் கொண்டார்கள், ஆனால் யாக்கோபு மறுத்துவிட்டார். ஆகவே, சகோதரர்கள் கானானிலேயே தங்கிவிட்டனர்.

## இரண்டாம் பிரயாணம் (ஆதியாகமம் 43:1-45:28)

முதல் பிரயாணத்தைப் பற்றிச் சுருக்கமாகப் பார்த்த நாம், இப்போது ஆதியாகமம் 43:1-45:28-லுள்ள இரண்டாம் பிரயாணத்தின் சம்பவங்களைப் பற்றிப் பார்ப்போம். இரண்டாம் பிரயாணம் ஒருவிதத்தில் முதல் பிரயாணத்தை விடக் கடினமானதாக இருந்தாலும், இதுவும் மூன்று முக்கியப் பகுதிகளாகப் பிரிகிறது. 43:1-14 வசனங்களைக் கொண்ட முதல் பகுதி, சகோதரர்கள் எகிப்திற்குப் பிரயாணப்படுவதற்கும் முன்னர் நடந்ததைப் பற்றியது. அவர்கள் கொண்டு வந்த தானியம் தீர்ந்து போனதும், இறுதியில் யாக்கோபு சகோதரர்களுடன் பென்யமீனை அனுப்ப சம்மதித்தார்.

43:15-45:24-லுள்ள இரண்டாம் பகுதி, எகிப்தில் நடந்த சம்பவங்களை விரிவாக சித்தரிக்கிறது. முதலில், 43:15-34 இல், யோசேப்பு தன் வீட்டில் நடக்கும் பெரிய விருந்துக்கு வரும்படி தன் சகோதரருக்கு அழைப்புவிடுத்தார். ஆனால், தொடர்ந்து தன்னை அடையாளம் காண்பித்துக் கொள்ளாமலே இருந்தார். 43:30 இன் படி, பென்யமீனைக் கண்டதும் யோசேப்பின் இருதயம் மிகவும் பொங்கியதால், அழும்படி அவர் அந்த அறையை விட்டு வெளியேறினார்.

44:1-13 இல், யோசேப்பு தன் சகோதரரை மீண்டும் சோதித்தார். அவர் தன் உக்கிராணக்காரனிடம் அவர்களுடைய பைகளில் தானியத்தையும், பணத்தையும் வைத்து, பென்யமீனின் பையில் மட்டும் ஒரு வெள்ளிப் பாத்திரத்தை வைக்குமாறு கூறினார். பின்னர் யோசேப்பு தன் சகோதரரை கானானுக்கு அனுப்பிவிட்டார். ஆனால், யோசேப்பின் ஆணையின்படி, உக்கிராணக்காரன் சகோதரர்களைத் தொடர்ந்து பிடித்து சோதித்துப் பார்த்தான். அப்போது பென்யமீனின் பையில் வெள்ளிப் பாத்திரம் இருப்பதைக் “கண்டு”, சகோதரர்களை மீண்டும் யோசேப்பின் வீட்டிற்கு அழைத்து வந்தான்.

14-34 வசனங்களில், யோசேப்பிடம் இரக்கத்திற்காகக் கெஞ்சிய யூதா, 16-ஆம் வசனத்தில், “உம்முடைய அடியாரின் அக்கிரமத்தை தேவன் விளங்கப்பண்ணினார்” என்று ஒப்புக் கொண்டான். அதன் பின்னர் பென்யமீனுக்கு பதிலாக எகிப்தில் தங்க யூதா சுயநலமின்றி முன்வந்தான். யூதா கெஞ்சியதைப் பார்த்த யோசேப்பு மனதுருகினார். இறுதியாக 45:1-15 இல், யோசேப்புத் தன்னை அடையாளம் காண்பித்தார். “அவன் [யோசேப்பு] சத்தமிட்டு அழுதான்; அதை எகிப்தியர் கேட்டார்கள், பார்வோனின் வீட்டாரும் கேட்டார்கள்” என்று 45:2 கூறுகிறது. 7-ஆம் வசனத்தில் யோசேப்பு, “பூமியிலே உங்கள் வம்சம் ஒழியாமலிருக்க உங்களை ஆதரிக்கிறதற்காகவும், பெரிய இரட்சிப்பினால் உங்களை உயிரோடே காப்பதற்காகவும் தேவன் என்னை உங்களுக்கு முன்னமே அனுப்பினார்” என்று விளக்கினார். அதன் பின்னர், தன் தகப்பனாகிய யாக்கோபையும் எகிப்திற்கு அழைத்து வருமாறு தன்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

சகோதரருக்குக் கட்டளையிட்டார். 14-15 வசனங்களில், யோசேப்பும் பென்யமீனும் ஒருவரையொருவர் கட்டித் தழுவி அழுதது, மற்றும் யோசேப்பு தன் சகோதரர்களை முத்தம் செய்து அவர்களுடன் பேசிக் கொண்டிருந்ததுடன் இந்தக் காட்சி நிறைவடைகிறது.

> யோசேப்புடைய கதையின் நடுப்பகுதி யோசேப்பும் அவருடைய சகோதரரும் ஒப்புரவானதைப் பற்றியது. அவர் ஏற்கனவே எகிப்திற்குப் போய்விட்டார், அங்கு போராட்டங்கள் வந்தன, யோசேப்பின் சகோதரர்கள் தானியமும், பஞ்சத்திலிருந்து விடுதலையும் தேடி எகிப்திற்கு வந்தார்கள், ஆனால் இவற்றின் மத்தியில், குறிப்பாக 45-ஆம் அதிகாரத்தில், இந்த மாபெரும் **கா**ட்சியை காண்கிறோம். அது உண்மையில் மிகப் பெரியது. ஆதியாகம புத்தகத்திலேயே மிகவும் தத்ரூபமான மற்றும் உணர்வுபூர்வமான பகுதிகளில் இதுவும் ஒன்று, இதில்தான் யோசேப்பும் அவனுடைய சகோதரர்களும் இறுதியாக ஒப்புரவானார்கள். அவர்கள் ஒருவரையொருவர் கட்டி அணைத்து, அழுது கொண்டே இருக்கிறார்கள். எகிப்தியர்கள், ஏன் இவர்கள் இப்படி அழுகிறார்கள் என்று ஆச்சரியப்படும் அளவிற்கு இந்த அதிகாரத்திலும், இதற்கு சற்று முன்னும் அவர்கள் அழுதார்கள். ஆகவே இது, முன்பு இசைவின்றி இருந்த சகோதாரர்கள் இப்போது முற்றிலுமாக ஒன்றிணைந்ததைச் சித்தரிக்கும் அழகிய பகுதியாக விளங்குகிறது. முதலில் யோசேப்பு தன் சகோதரர்களை சோதித்து அவர்கள் மாறியிருப்பதை அறிந்து கொண்டார் என்னும் உண்மைநிலையின் அடிப்படையிலேயே அந்த ஒருமைப்பாடு நிகழ்ந்தது. அவர்கள் ஆதியில் அவரைக் கொலை செய்ய நினைத்தது, தங்கள் தகப்பனை ஏமாற்றியது போன்ற காரியங்களைச் செய்தபோது இருந்தது போல இப்போது இல்லை. அவர்கள் மாறியிருந்தார்கள், அதோடு அவர்களுக்குள் யூதா போன்றவர்கள் குறிப்பாக நன்றாக மாறியிருந்தார்கள்... இந்தச் சகோதரர்கள் மாறிவிட்டனர், யோசேப்பும் மாறிவிட்டார் என்னும் உண்மைநிலையின் அடிப்படையில் ஒப்புரவாகுதல் நடக்கிறது. தன் சொப்பனங்களைக் குறித்து மிகவும் பெருமையுடன், வேகம் நிறைந்த ஒரு வாலிபனாக இருந்த யோசேப்பு, இப்போது அதிகாரத்திலிருந்தாலும் இரக்கம் செய்கிறவராக மாறியிருந்தார். அந்த மாற்றங்கள் நடந்த அந்த அதிகாரங்களைப் பார்க்கும்போது, இப்போது அவர்கள் ஒருவரையொருவர் கட்டி அணைத்து அழுதுகொண்டிருப்பது



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> மிக அருமையான ஒன்று. அது நிச்சயமாக மோசேயின் காலத்தில் இருந்த இஸ்ரவேலரின் மனதைத் தொட்டிருக்கும் என்பதில் சந்தேகமில்லை.
>
> – Dr. ரிச்சார்ட் எல். ப்ராட், Jr.

பின்னர், 45:16-24 இல், யாக்கோபை அழைத்து வருவதற்கு யோசேப்பு தன் சகோதரரை அனுப்பி வைக்கும்படி பார்வோன் கட்டளையிட்டான். அதோடு 20-ஆம் வசனத்தில், பார்வோன் யோசேப்பிடம், “எகிப்து தேசமெங்குமுள்ள நன்மை உங்களுடையதாயிருக்கும்” என்றும் வாக்குப்பண்ணினான். அதற்கு இணங்கிய யோசேப்பு தன் சகோதரர்கள் தொடர்ந்து அந்த இசைவைக் காத்துக் கொள்ளும்படிச் சொல்லி அனுப்பினார். 24 ஆம் வசனத்தில் யோசேப்பு, “நீங்கள் போகும் வழியிலே சண்டை பண்ணிக் கொள்ளாதிருங்கள்!” என்று சொல்வதைக் கவனியுங்கள்.

இரண்டாம் பிரயாணத்தின் இறுதிப் பகுதியான 45:25-28 வசனங்களில், சகோதரர்கள் கானானுக்குத் திரும்புகிறார்கள். அவர்கள் அங்கு சென்று யாக்கோபிடம் எகிப்தில் நடந்தவைகளைச் சொல்ல, யாக்கோபும் அவர்களுடன் எகிப்திற்குச் செல்ல ஒப்புக்கொள்கிறார்.

முதலாம் மற்றும் இரண்டாம் பிரயாணங்களில் முற்பிதாக்கள் ஒப்புரவாகி ஒன்றிணைந்த நிகழ்வைக் கண்ட நாம், ஆதியாகமம் 46:1-47:12-லுள்ள மூன்றாம் பிரயாணத்திற்கு வருகிறோம்.

## மூன்றாம் பிரயாணம் (ஆதியாகமம் 46:1-47:12)

மூன்றாம் பிரயாணம் இரு முக்கிய பகுதிகளாகப் பிரிகிறது. 46:1-27 லுள்ள முதல் பகுதி, சகோதரர்கள் மீண்டும் எகிப்திற்கு பிரயாணப்பட்டதை விவரிக்கிறது, இம்முறை அவர்கள் யாக்கோபையும் அழைத்துச் சென்றார்கள். 1-7 வசனங்களில், பிரயாணக் குறிப்புகளையும், யாக்கோபு எகிப்தில் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பார் என்பதை தேவன் மீண்டும் உறுதிப்படுத்துவதையும் காண்கிறோம். 46:8-27 இல் எகிப்திற்குச் சென்ற யாக்கோபின் குமாரர் மற்றும் பேரப்பிள்ளைகளுடைய பெயர்களின் பட்டியலுடன் இந்தப் பிரயாணங்கள் நிறைவடைகின்றன.

46:28-47:12 லுள்ள இரண்டாம் பாகத்தில், முதல் இரு பிரயாணங்களில் இருந்தது போலவே, எகிப்தில் நடந்த சம்பவங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. 46:28-30 இல், யாக்கோபு யோசேப்புடன் மீண்டும் இணைவதைப் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது, இதில் யூதாவின் பங்கு மிக முக்கியமானது. அதைத் தொடர்ந்து, 46:31-47:12 இல், பார்வோன் யோசேப்பின் குடும்பத்தை வரவேற்று, அவர்கள் கோசேன் நாட்டில் யோசேப்பின் பராமரிப்பில் இருக்கும்படி கட்டளையிட்டான்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

முற்பிதாக்கள் ஒப்புரவாகி, மீண்டும் இணைந்ததைப் பற்றி எழுதிய மோசே கதையின் நான்காம் பகுதியான வீழும் செயல்பாட்டிற்குத் திரும்புகிறார். ஆதியாகமம் 47:13-27 இல், மோசே எகிப்தில் யோசேப்பு தயாளத்துடன் ஆளுகை செய்ததைப் பற்றிக் கூறுகிறார்.

## யோசேப்பின் தயாளமுள்ள ஆளுகை (ஆதியாகமம் 47:13-27)

47:13-26 இல், காலப்போக்கில் பஞ்சம் மிகக் கொடிதானது என்று பார்க்கிறோம். யோசேப்பு எகிப்திற்கும், கானானுக்கும் தேவையான உணவுப்பொருள்களை சேமித்து வைத்திருந்தார். அவர் எகிப்தியர் மற்றும் கானானியரின் கால்நடைகளையும், நிலங்களையும் வாங்கிக் கொண்டு அவர்களைப் போஷித்து, பார்வோனின் அதிகார வரம்பை அதிகரித்தார். இவற்றைச் செய்யும்போது அவர் எண்ணற்ற உயிர்களையும் காப்பாற்றினார்.

இந்தப் பதிவின் முடிவில், ஆதியாகமம் 47:27 இல், யோசேப்பின் ஆளுகை எவ்வாறு யாக்கோபுக்கும் அவருடைய குமாரருக்கும் பலனளித்தது என்று மோசே கூறியுள்ளார். அதனை மோசே இவ்வாறு எழுதுகிறார்:

> இஸ்ரவேலர் எகிப்து தேசத்திலுள்ள கோசேன் நாட்டிலே குடியிருந்தார்கள். அங்கே நிலங்களைக் கையாட்சி செய்து, மிகவும் பலுகிப் பெருகினார்கள் (ஆதியாகமம் 47:27).

முற்பிதாக்களின் ஆரம்ப இசைவின்மை, யோசேப்பின் அச்சுறுத்தும் ஆளுகை, சகோதரர்களின் ஒப்புரவாகுதலும் ஒன்றிணைதலும், மற்றும் எகிப்தில் யோசேப்பின் தயாளமுள்ள ஆளுகை ஆகியவற்றைத் தொடர்ந்து, யோசேப்பையும், சகோதரரையும் பற்றிய மோசேயுடைய பதிவின் கடைசிப் படிக்கு வருகிறோம். ஆதியாகமம் 47:28-50:26 இல், யோசேப்பின் ஆளுகையின் கீழ் யோசேப்பின் குடும்பத்தினராகிய முற்பிதாக்கள் இசைவாக வாழ்ந்தார்கள்.

## முற்பிதாக்களின் இசைவு (ஆதியாகமம் 47:28-50:26)

இந்தக் கடைசிப் படி, முற்பிதாக்களிடையே இசைவில்லாமல் இருந்த ஆரம்பப் பிரச்சனையைத் தீர்ப்பதாக உள்ளது. யோசேப்பின் குடும்பத்தில் ஏற்பட்ட இசைவைப் பார்க்கும்போது, அது குறிப்பாக மோசேயின் ஆதி வாசகர்களுக்கு முக்கியமானதாக இருந்த இஸ்ரவேலின் ஆசீர்வாதங்களை உண்டாக்குவதை அறிகிறோம்.

முற்பிதாக்களின் இசைவைப் பற்றிய அதிகாரங்கள் இரு முக்கிய பகுதிகளாகப் பிரிகின்றன. ஆதியாகமம் 47:28-50:14 இல் உள்ள முதல் பகுதியில்,



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

யாக்கோபு தன் கடைசிக் காலத்தில் குடும்பத்திற்காக செய்த ஏற்பாடுகளுக்கு நேராக மோசே நம் கவனத்தைத் திருப்புகிறார். அதன் பின்னர், ஆதியாகமம் 50:15-26 இல், யோசேப்பு தன் குடும்பத்திற்காக ஏற்பாடுகள் செய்வதைக் காண்கிறோம். யாக்கோபு குடும்பத்திற்காக செய்த ஏற்பாடுகளை முதலில் காண்போம்.

## யாக்கோபின் குடும்ப ஏற்பாடுகள் (ஆதியாகமம் 47:28-50:14)

இந்தப் பகுதி யாக்கோபு தன் மரண நேரத்தை நெருங்குவதில் தொடங்குகிறது. 47:28-31 இல், யாக்கோபு தன்னை கானானில் அடக்கம் செய்யுமாறு யோசேப்பிடம் கேட்டுக் கொண்டதை மோசே விளக்குகிறார். அதன் பின்னர், 48:1-49:28 இல், யாக்கோபின் ஆசீர்வாதங்களைக் கொண்ட இரு வேறு சந்திப்புகளைக் காண்கிறோம்.

48:1-22 இல் உள்ள முதல் சந்திப்பில், யாக்கோபு தனிப்பட்ட விதத்தில் யோசேப்பின் குமாரராகிய எப்பிராயீமையும், மனாசேயையும் ஆசீர்வதிக்கிறார். இங்கு, யோசேப்பு வழக்கமாக முதல்பேறானவனுக்குக் கொடுக்கப்படும் இரண்டு மடங்கு சுதந்தரத்தைப் பெற்று கனமடைகிறார். ஏனென்றால், யாக்கோபு எப்பிராயீமையும், மனாசேயையும் அவர்களுடைய தகப்பனின் சகோதரர்களுக்குச் சமமாக்கத் தீர்மானித்தார். ஆனால் எதிர்பாராத விதமாக, யாக்கோபு யோசேப்பின் இரண்டாவது மகனாகிய எப்பிராயீமுக்கு முதல்பேறான மனாசேயை விட அதிக முக்கியத்துவம் கொடுத்தார்.

அதன் பின்னர், யோசேப்பையும் அவருடைய குமாரரையும் தனியாக உயர்த்தி ஆசீர்வதித்த பின்னர், யாக்கோபின் குமாரர்கள் அனைவரும் 49:1-28 இல் இறுதி ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொண்டனர். யாக்கோபு தன் குமாரரை கூடி வரச் செய்து, முற்பிதாக்களாகிய அவர்கள் வாழ்ந்த விதத்திற்கு ஏற்ப அவர்களை ஒவ்வொருவராக ஆசீர்வதித்தார். யாக்கோபின் கடைசி ஆசீர்வாதங்களான இந்த ஏற்பாடுகள் வரப்போகும் அவர்களின் சந்ததிகளுக்கு நிலைத்திருக்கும்படிக் கொடுக்கப்பட்டது.

ஆதியாகமம் 49:29-50:14 இல் யாக்கோபு மரித்து அடக்கம் செய்யப்படுவதுடன் இப்பகுதி நிறைவடைகிறது. இந்த வசனங்களில், யோசேப்பு தன் தகப்பனின் விருப்பத்தை நிறைவேற்றி, அவரை கானானில் அடக்கம் செய்தார். அதன் பின்னர் அவர்கள் மீண்டும் எகிப்திற்குத் திரும்பினர்.

யோசேப்பின் ஆளுகையின் கீழ் முற்பிதாக்களிடையே ஏற்பட்ட இசைவு யாக்கோபு செய்த குடும்ப ஏற்பாடுகளைப் பற்றிய பகுதியை மட்டுமல்ல, ஆதியாகமம் 50:15-26 இல் யோசேப்பு செய்த குடும்ப ஏற்பாடுகளைப் பற்றிய பகுதியையும் கொண்டுள்ளது.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

## யோசேப்பின் குடும்ப ஏற்பாடுகள் (ஆதியாகமம் 50:15-26)

இச்சிறு பகுதி இரு சிறு அறிக்கைகளாகப் பிரிகிறது. 50:15-21 இல், யோசேப்பு தன் சகோதரரிடம் தொடர்ந்து தயவுடன் நடந்து கொள்வதாக உறுதியளிக்கிறார். யோசேப்பின் சகோதரர்கள் அவரிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டார்கள், யோசேப்பும் தயவாக அவர்களை மன்னித்துவிட்டார்.

> யோசேப்பு மற்றும் சகோதரர் கதையில் நாம் பார்க்கும் காரியங்களில் ஒன்று மன்னிப்பின் வல்லமை, சூழ்நிலைகள் மிகக் கடினமாக இருக்கும்போதும் நமக்கான தேவனுடைய நோக்கங்களை நம்பியிருக்கும் வல்லமை மற்றும் அதே கடினமான சூழ்நிலையில் இல்லாதவர்களைக் காணமுடிவதும் ஆகும். அவர்களைப் பற்றி நாம், "அவர்கள்தான் என்னை இந்த நிலைக்கு ஆளாக்கினார்கள்" என்று சொல்லலாம். ஆனால், யோசேப்பு தன்னை அடிமையாக விற்றுப்போட்ட தன் சகோதரரிடம் நடந்து கொண்ட விதத்தில், கர்த்தர் மீதான நம்பிக்கையையும், கீழ்ப்படிதலையும், தேவன் தனக்காக நியமித்திருந்த தனித்தன்மையுள்ள மற்றும் முக்கியமான நோக்கத்தை நிறைவேற்றுவதையும் காணலாம்.
>
> – Rev. Dr. மைக்கேல் வாக்கர்

ஆதியாகமம் 50:19-21 இல் யோசேப்பு தன் சகோதரரிடம் இவ்வாறு கூறினார்:

> பயப்படாதிருங்கள். நான் தேவனா? நீங்கள் எனக்குத் தீமைசெய்ய நினைத்தீர்கள்; தேவனோ, இப்பொழுது நடந்துவருகிறபடியே, வெகு ஜனங்களை உயிரோடே காக்கும்படிக்கு, அதை நன்மையாக முடியப்பண்ணினார். ஆதலால், பயப்படாதிருங்கள். நான் உங்களையும் உங்கள் குழந்தைகளையும் பராமரிப்பேன் (ஆதியாகமம் 50:19-21).

யோசேப்பையும், சகோதரரையும் பற்றிய முழுக் கதையும் ஆதியாகமம் 50:22-26 இல் யோசேப்பு தன் சகோதரர்களிடம் கேட்டுக் கொண்ட ஒரு வாக்குறுதியுடன் நிறைவடைகிறது. ஆதியாகமம் 50:25 ஐக் கவனியுங்கள்:

> "தேவன் உங்களைச் சந்திக்கும்போது, என் எலும்புகளை இவ்விடத்திலிருந்து கொண்டுபோவீர்களாக" என்றும் சொல்லி; யோசேப்பு இஸ்ரவேல் புத்திரரிடத்தில் ஆணையிடுவித்துக் கொண்டான் (ஆதியாகமம் 50:25).



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

ஆதியாகமப் பதிவில் இந்த வாக்குறுதிதான் யோசேப்பு தான் மரணமடையும் முன்னர் தன் சகோதரரிடம் பேசிய கடைசி வார்த்தைகள் ஆகும். யோசேப்பின் சகோதாரரர்கள், தேவன் தங்களை எகிப்திலிருந்து விடுவிக்கும்போது, யோசேப்பின் எலும்புகளை வாக்குத்தத்த தேசத்தில் அடக்கம் பண்ணும்படி எடுத்துச் சென்று அவரை கனம் பண்ணுவதாக தங்கள் சந்ததியினர் சார்பில் வாக்குப்பண்ணினார்கள்.

> யோசேப்பின் கடைசி வார்த்தைகள் இவையே: “தேவன் நிச்சயமாக உங்களைச் சந்திப்பார்” – அவர் தன் சகோதரர் மற்றும் அவர்களுடைய குடும்பத்தினரிடம் பேசும்போது – “என் எலும்புகளை இவ்விடத்திலிருந்து கொண்டுபோவீர்களாக” என்று கூறினார். எகிப்திய அதிபதியான யோசேப்பு மரித்த பின்னர் அவருடைய சரீரத்திற்கு கந்தவர்க்கங்கள் பூசி, சவப்பெட்டியில் பதப்படுத்தி வைத்திருப்பார்கள்… ஒவ்வொரு முறையும் அந்த சவப்பெட்டியைப் பார்க்கும்போதும், யோசேப்பு கொடுத்த வாக்குறுதியையும், அவர்கள் வாக்குத்தத்த தேசத்திற்குத் திரும்புவார்கள் என்று முற்பிதாக்களுக்குக் கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தத்தையும் நினைவுகூருவார்கள். யோசேப்பு, “என் எலும்புகளை எடுத்துக் கொண்டு போவீர்களாக; அதை வாக்குத்தத்த தேசத்தில் உங்களுடன் வைத்துக் கொள்ளுங்கள்” என்று சொல்லியிருந்தார். அது, அவர் தேவனுடைய வாக்குத்தத்தத்தை ஏற்றுக் கொண்டதைக் குறிக்கிறது… ஆகவே, யூதர்கள் எகிப்தை விட்டுப் புறப்பட்டபோது, மோசே தங்களுடன் யோசேப்பின் எலும்புகளையும் எடுத்துச் சென்றார். மீண்டும், நாற்பது ஆண்டுகளாக, அது இஸ்ரவேல் ஜனங்கள் வாக்குத்தத்த தேசத்தில் வாசம் பண்ணுவார்கள் என்று தேவன் கொடுத்த மாபெரும் வாக்குத்தத்தத்தை காணக்கூடிய விதத்தில் அவர்களுக்கு நினைவுறுத்தும் அடையாளமாக இருந்தது. ஆகவே, இறுதியில் அந்த எலும்புகளை சீகேமில் அடக்கம் செய்தார்கள், இங்கு இருக்கும் கொள்கை மிக எளிமையானது என்று நினைக்கிறேன்: வாழ்க்கையில் வேறு எதையும் விட தேவனுடைய வாக்குத்தத்தங்களே அதிக மெய்யானதாக இருக்க வேண்டும். தேவன் தம் வாக்குத்தத்தங்களைக் காக்கிறார்.
>
> – Dr. லாரி ஜே. வாட்டர்ஸ்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

யோசேப்பும், அவருடைய சகோதரரும் என்ற நம் பாடத்தில் இதுவரை மோசேயுடைய பதிவின் அமைப்பையும், பொருளடக்கத்தையும் பற்றிப் படித்தோம். இப்போது, நம் பாடத்தின் இரண்டாம் முக்கியத் தலைப்பான ‘இவ்வதிகாரங்களின் முக்கிய கருப்பொருள்கள்’ என்பதைப் பார்க்கவிருக்கிறோம்.

# முக்கிய கருப்பொருள்கள்

யோசேப்பையும், அவருடைய சகோதரரையும் பற்றிய கதை நாம் இங்கு குறிப்பிடக் கூடியதை விட மிக அதிகமான தாக்கங்களை ஆதியாகமத்தின் ஆதி வாசகர்களிடம் ஏற்படுத்தியுள்ளன. இது நவீன கால பிரயோகத்திற்கும் பொருந்தும். இருப்பினும், இந்த அதிகாரங்களை ஆதி வாசகர்களின் சூழலில் வைத்துப் பார்க்கும்போது, குறிப்பிட்ட சில கருப்பொருள்கள் முன்னணியில் தெளிவாகத் தெரிய வரும். இம்முக்கிய கருப்பொருள்கள் யோசேப்பின் கதை அதன் ஆதி வாசகர்களிடம் தாக்கத்தை ஏற்படுத்தும்படி வடிவமைக்கப்பட்ட எல்லா வழிகளையும் பற்றிச் சொல்வதில்லை. நாம் இன்று அவற்றைப் பிரயோகிக்கக் கூடிய எல்லா வழிகளையும் குறிப்பதுமில்லை. ஆனால், இம்முக்கிய கருப்பொருள்கள் ஆதியாகமத்தின் இப்பகுதியிலுள்ள மிக முக்கியமான அம்சங்களில் நம்மை கவனம் செலுத்த வைக்கின்றன.

இவ்வதிகாரங்களின் ஒருசில முக்கிய கருப்பொருள்களை இரு விதங்களில் நாம் பார்க்கவிருக்கிறோம். முதலில், யோசேப்பின் கதையிலும், ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபைப் பற்றிய பதிவுகளிலும் பொதுவாக வலியுறுத்தப்படும் சில காரியங்களை எப்படி அணுகுவது என்பதைப் பற்றிய சில குறிப்புகளைக் காண்போம். இரண்டாவதாக, யோசேப்பையும், அவருடைய சகோதரரையும் பற்றிய கதையில் மேற்கோளிட்டு வலியுறுத்தப்படும் இரு விசேஷித்த காரியங்களை நாம் மிகக் கவனமாகப் பார்க்கவிருக்கிறோம். பொதுவாக வலியுறுத்தப்பட்டவைகளில் சிலவற்றை முதலில் பார்ப்போம்.

## பொதுவாக வலியுறுத்தப்பட்டவை

ஆதியாகமத்தைப் பற்றிய மற்ற பாடங்களில் பார்த்தது போல, ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபின் வாழ்க்கையைப் பற்றிய விபரங்களில் நான்கு முக்கிய கருப்பொருள்கள் காணப்படுகின்றன. இத்தலைப்புகள் யோசேப்பையும், அவரது சகோதரரையும் பற்றிய கதையிலும் வருகின்றன: அவை, இஸ்ரவேலரின் மீதான தேவகிருபை, இஸ்ரவேலர் தேவன் மீது கொண்டிருக்க வேண்டிய பற்றுறுதி, இஸ்ரவேலரின் மீதான தேவனுடைய ஆசீர்வாதம், மற்றும் இஸ்ரவேலர் மூலமாக மற்றவர்களுக்குக் கிடைத்த தேவனுடைய



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

ஆசீர்வாதங்கள் ஆகியவையாகும். வேதாகமத்தின் இப்பகுதியிலுள்ள இஸ்ரவேலரின் மீதான தேவகிருபை என்ற தலைப்பை எப்படி அணுகுவது என்பதைப் பற்றி சற்று யோசிப்போம்.

## இஸ்ரவேலின் மீதான தேவகிருபை

தெய்வீக கிருபை, இரக்கம், மற்றும் தயவைக் குறிப்பிட வேதம் குறிப்பிட்ட பதங்களைப் பயன்படுத்துகிறது என்றாலும், யோசேப்பின் கதையில் நாம் இவற்றை அரிதாகவே பார்க்க முடிகிறது.இருந்தபோதிலும், இந்த அதிகாரங்கள் முழுவதிலும் தேவகிருபை என்னும் கருப்பொருளை காணத்தான் செய்கிறோம். யோசேப்பின் காலத்தில் இருந்ததாக நாம் கூறும் "அந்த உலகத்தில்" தேவன் யோசேப்பு மற்றும் அவருடைய குடும்பத்தார் மீது அவர்களுடைய காலம் வரும் முன்பே கொண்டிருந்த கிருபையான கடந்தகால கிருபையை எப்போதாவதுதான் அவர்களுக்கு நினைவுறுத்தினார். ஒவ்வொரு திருப்பத்திலும், தேவன் தம்முடைய தொடரும் கிருபையை யோசேப்புக்கும், அவருடைய குடும்பத்திற்கும் வெளிப்படுத்தி வந்தார். எதிர்காலத்தில் நடக்கவிருந்த காரியங்களை தேவன் அவர்களுக்குச் சுட்டிக் காண்பித்தபோது, யோசேப்பும் அவருடைய குடும்பத்தாரும் எப்படி ஒருநாளில் இனிவரும் கிருபையை, குறிப்பாக வாக்குத்தத்த தேசத்திற்குத் திரும்பும் கிருபையைப் பெற்றுக் கொள்ளவிருக்கிறார்கள் என்பதை அடிக்கடி குறிப்பிட்டுக் காண்பித்தார்.

ஆனால் இம்மூன்று விதமான கிருபையும் யோசேப்பின் கதையை மட்டும் வடிவமைக்கவில்லை. மோசே தம் ஆதி வாசகர்கள் "தங்கள் உலகத்தில்" பலவிதங்களில் தேவன் தங்களுக்குக் காண்பித்த கிருபையைப் பற்றி சிந்திக்க வேண்டும் என்பதற்காக மோசே யோசேப்பின் உலகத்தில் இருந்த தேவகிருபையைப் பற்றி எழுதினார்.

இதேவிதமாக, கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர்களாகிய நாமும், தேவன் யோசேப்புக்குக் காண்பித்த கிருபையை நம்முடைய உலகத்தில் பிரயோகிக்கலாம். இதைச் செய்ய பல வழிகள் உண்டு என்றாலும், இதனை கிறிஸ்துவுடைய ராஜ்யத்தின் மூன்று நிலைகளின் அடிப்படையில் யோசிப்பது பெரும்பாலும் உதவியாக இருக்கும். நம்முடைய புதிய ஏற்பாட்டுக் கண்ணோட்டத்தில், யோசேப்புக்கும் அவருடைய சகோதரருக்கும் காண்பிக்கப்பட்ட தேவகிருபை கிறிஸ்துவின் முதல் வருகையில் துவங்கிய அவருடைய ராஜ்யத்தின் மூலம் வெளிப்பட்டதால் அது நமக்கும் பொருந்தும். யோசேப்பின் கதையில் தொடர்ந்து வந்த தேவகிருபையை பார்க்கும்போதெல்லாம், கிறிஸ்துவின் ராஜ்யம் தொடருமளவும் நம்முடைய அனுதின வாழ்விலும் இத்தொடரும் கிருபை இருப்பது நினைவுபடுத்தப்படுகிறது. யோசேப்பும், அவரது குடும்பத்தினரும் இனிவரும் தேவகிருபையை எதிர்பார்த்திருந்தது போல, புதிய வானமும், புதிய பூமியும் உண்டாகும்போது, கிறிஸ்துவின் ராஜ்யம் உச்சகட்டத்திற்கு வருகையில்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

கிடைக்கும் தேவனுடைய இரக்கங்களுக்காக நாமும் நம்பிக்கையுடன் காத்திருக்கலாம்.

பொதுவாக வலியுறுத்தப்படும் இஸ்ரவேலின் மீதான தேவகிருபையுடன், இஸ்ரவேலர் எவ்வாறு தேவனிடம் பற்றுறுதியுடன் இருக்க வேண்டியது அவசியமாயிற்று என்பதையும் பார்ப்போம்.

## தேவன் மீது இஸ்ரவேலர் கொண்டிருக்க வேண்டிய பற்று

மோசே ஒருபோதும் தேவனிடமிருந்து வந்த வாய்வழி அறிவுறுத்தல்களையோ அல்லது கட்டளைகளையோ யோசேப்பு மற்றும் அவருடைய சகோதரரின் உலகத்தைப் பற்றிய தன் பதிவில் குறிப்பிடாதது அதன் வழக்கத்திற்கு மாறான அம்சமாகும். மாறாக, இஸ்ரவேலர்கள் தங்கள் உலகத்தில் பெற்றுக் கொண்ட நியாயப்பிரமாணத்தின் வெளிச்சத்தில் யோசேப்பு தேவனிடம் கொண்டிருந்த பற்றுறுதியை மதிப்பீடு செய்ய வேண்டும் என்று மோசே எதிர்பார்த்தார்.

முற்பிதாக்கள் தேவனுடைய நியாயப்பிரமாணத்தில் பற்றுறுதியாக இருப்பதன் மூலம் இரட்சிப்பைப் பெற்றுக் கொள்ள இயலவில்லை என்பதை மோசே அறிந்திருந்தார். அது எப்போதுமே சாத்தியமாயிருக்கவில்லை. ஆனால், கதையின் ஒவ்வொரு படியிலும் அவர்களுடைய கீழ்ப்படிதலும், கீழ்ப்படியாமையும் அவர்களுடைய இருதயத்தின் உண்மைநிலையை வெளிப்படுத்தின. யோசேப்பின் கதையின் வெளிச்சத்தில் தங்கள் இருதயங்களை பரிசோதித்துப் பார்க்குமாறு மோசே தன் வாசகர்களுக்கு அழைப்பு விடுத்தார்.

உதராணமாக, எதிர்மறையான விதத்தில், சகோதரர்கள் யோசேப்பைக் கொல்லத் திட்டமிட்டதை தேவன் அங்கீகரிக்கவில்லை என்பதை மோசே நேரடியாகச் சொல்ல வேண்டியதிருக்கவில்லை. அது யாத்திராகமம் 20:13 இல் உள்ள கொலை செய்வதற்கு எதிரான ஆறாம் கற்பனையை மீறுவதாக இருந்தது என்பதை அவரது வாசகர்கள் ஏற்கனவே அறிந்திருந்தார்கள். யோசேப்பை அடிமையாக விற்றுப் போட்டது உபாகமம் 24:7 போன்ற நியமங்களை மீறுவதாக இருந்தது. சகோதரர்கள் யாக்கோபை வஞ்சித்ததன் மூலம் உன் தகப்பனையும் தாயையும் கனம் பண்ணுவாயாக என்னும் யாத்திராகமம் 20:12 –லுள்ள கற்பனையை மீறினார்கள். யூதா தாமாரை ஒரு வேசி என்று நினைத்து, அவளுடன் தகாத உறவு கொண்டபோது, யாத்திராகமம் 20:14 இல் உள்ள பாலியல் ஒழுக்கத்திற்கு விரோதமான கற்பனைகளையும், லேவியராகமம் 19:29 இல் உள்ள மற்ற கற்பனைகளையும் மீறினான்.

ஆனால், நேர்மறையான விதத்தில், யோசேப்பும், அவரது சகோதரரும் தேவனிடம் பற்றுறுதி கொண்டிருந்தார்களா என்பதை அடையாளம் காணுமளவிற்கு தன் வாசகர்கள் தேவனுடைய நியாயப்பிரமாணங்களை



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

அறிந்திருந்தார்கள் என்றும் மோசே நம்பினார். உதாரணமாக, போத்திபாரின் மனைவித் தன்னை மயக்கியபோது யோசேப்பு அதைத் தடுத்து, பாலியல் தூய்மையை வெளிப்படுத்தியபோது, யாத்திராகமம் 20:14 மற்றும் 17 இல் உள்ள ஏழாம் மற்றும் பத்தாம் கற்பனைகளுக்குக் கீழ்ப்படிந்தார். பின்னர், ஆதியாகமம் 46:29-34 போன்ற பகுதிகளில், யோசேப்பும் அவரது சகோதரர்களும் யாத்திராகமம் 20:12 இல் உள்ள ஐந்தாம் கற்பனையின்படி தங்கள் தகப்பனை கனம் பண்ணினார்கள். யோசேப்பின் முன் சகோதரர்கள் மனந்திரும்பி தாழ்மைப்பட்டது லேவியராகமம் 5:5 இல் உள்ள நியமத்தை நினைவுறுத்துகிறது. யோசேப்பு தன் சகோதரரிடம் காண்பித்த இரக்கமும் தயவும் லேவியராகமம் 19:18 போன்ற வேதபகுதிகளுக்கு உண்மையாக இருந்தன. ஆகவே, மோசே அக்கால உலகத்தில் இருந்த பற்றுறுதியின்மையையும், பற்றுறுதியையும் விவரித்து, ஆதி இஸ்ரவேல் வாசகர்கள் தங்கள் உலகத்தில் கொண்டிருந்த பற்றுறுதியின்மை மற்றும் பற்றுறுதிக்கு நேராக அவர்களின் கவனத்தைத் திருப்பினார்.

நவீன கால கிறிஸ்தவர்களாகிய நாம் யோசேப்பின் கதையிலுள்ள தேவன் மீதான பற்றுறுதியின்மை மற்றும் பற்றுறுதியைப் பற்றி குறைந்தது மூன்று முக்கிய வழிகளில் சிந்தித்துப் பார்க்க வேண்டும். முதலில், இம்மூன்று உதாரணங்களையும் இயேசு பிதாவுக்கு, குறிப்பாகத் தம் ராஜ்யத்தின் துவக்கத்தில், பூரணமாகக் கீழ்ப்படிந்ததுடன் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். இரண்டாவதாக, கிறிஸ்துவின் ராஜ்யம் தொடர்ந்து செயல்பட்டுக் கொண்டிருக்க, யோசேப்பின் கதையின் ஒழுக்கநெறிக் கொள்கைகளை நம் அனுதின வாழ்வில் பிரயோகிக்க நாம் ஆயத்தமாக இருக்க வேண்டும். இறுதியாக, யோசேப்பின் கதையில் பற்றுறுதி அவசியமாக இருந்தது என்பது கிறிஸ்துவின் ராஜ்யம் உச்சக்கட்டத்தை அடைகிறதான அவருடைய வருகையில் நடக்கப் போவது என்ன என்பதற்கு நேராக நம் கவனத்தைத் திருப்ப வேண்டும். அந்த நேரத்தில், கிறிஸ்துவுக்குள் இரட்சிப்பின் விசுவாசத்தைக் கொண்டிருப்பவர்கள் அனைவரும் முழுமையான இரக்கத்தைப் பெற்று, புதிய வானம் மற்றும் புதிய பூமியில் தேவனுடைய பூரணமான கீழ்ப்படிதலுள்ள ஊழியக்காரர்களாக மறுரூபமடைவார்கள்.

இஸ்ரவேலர் மீதான தேவகிருபை மற்றும் தேவனிடம் இஸ்ரவேலர் கொண்டிருக்க வேண்டிய பற்றுறுதி ஆகியவை பொதுவாக வலியுறுத்தப்படுவதைப் பற்றிப் பார்த்தோம். யோசேப்பின் கதையிலும், ஆதி முற்பிதாக்களின் சரித்திரத்திலும் மூன்றாவதாக பொதுவாக வலியுறுத்தப்படும் கருப்பொருள் இஸ்ரவேலின் மீதான தேவனுடைய ஆசீர்வாதமாகும்.

## இஸ்ரவேலின் மீதான தேவனுடைய ஆசீர்வாதம்

யோசேப்பு மற்றும் அவரது சகோதரரின் “அக்கால உலகத்தின்படி”, முற்பிதாக்கள் பற்றுறுதி இல்லாமல் இருந்த சில நேரங்களிலும், அவர்கள் பற்றுறுதியுடன் இருந்த மற்ற நேரங்களிலும் தேவன் தம் ஆசீர்வாதங்களை



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

ஊற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது. அந்த உலகத்தில் தேவன் தம் ஜனத்திற்கு அருளிய ஆசீர்வாதங்களை தன் ஆதி வாசகர்களின் உலகத்தில் – அவர்கள் பற்றுறுதி இல்லாமல் இருந்தபோதும், பற்றுறுதியாக இருந்ததற்குப் பதிலாகவும் - தேவன் அவர்களை ஆசீர்வதித்த எண்ணற்ற வழிகளை அவர்கள் அறியும் விதத்தில் மோசே அமைத்திருந்தார்.

இதேவிதமாக, யோசேப்பு மற்றும் அவரது சகோதரரின் கதையில் இருந்த தேவனுடைய ஆசீர்வாதங்கள் இன்றைய நம் உலகத்திற்கும் பொருந்தும். சிலசமயங்களில் நாம் பற்றுறுதி இல்லாதிருக்கும்போதும், மற்றும் சில சமயங்களில் நாம் பற்றுறுதியாக இருக்கும்போதும் இவ்வாறு நடக்கிறது. கிறிஸ்துவினுடைய ராஜ்யத்தின் துவக்கத்தில் தேவன் தம் ஜனங்களின் மீது ஊற்றிய ஆசீர்வாதத்தை ஏற்றுக் கொள்வதன் மூலம் யோசேப்பின் கதைக்கும் நம் வாழ்க்கைக்கும் இருக்கும் தொடர்புகளை அறியலாம். இப்போது தொடர்ந்து கொண்டிருக்கும் கிறிஸ்துவின் ராஜ்யத்திலும் அவர் எப்படி நம்மை ஆசீர்வதிக்கிறார் என்றும் காண்கிறோம். கிறிஸ்துவினுடைய ராஜ்யத்தின் உச்சக்கட்டத்திலும் தேவன் எப்படி நம்மை ஆசீர்வதிக்கப் போகிறார் என்பதை எதிர்நோக்கியிருக்கிறோம்.

இஸ்ரவேலர் மீதான தேவகிருபை, தேவனிடம் இஸ்ரவேலர் கொண்டிருக்க வேண்டிய பற்றுறுதி, மற்றும் இஸ்ரவேலர் மீதான தேவனுடைய ஆசீர்வாதம் ஆகிய பொதுவான வலியுறுத்தல்களுடன், இஸ்ரவேலர் மூலமாக மற்றவர்களுக்குக் கிடைக்கும் தேவனுடைய ஆசீர்வாதங்கள் என்பதையும் யோசேப்பின் கதை பொதுவாக வலியுறுத்துகிறது.

## இஸ்ரவேலர் மூலமாக மற்றவர்களுக்குக் கிடைக்கும் தேவனுடைய ஆசீர்வாதங்கள்

தேவன் இஸ்ரவேலை ஆசீர்வதித்து, தம்முடைய ராஜ்யத்தையும், அதன் ஆசீர்வாதங்களையும் சகல தேசங்களுக்கும் பரப்புவதற்காக ஆபிரகாமையும் அவருடைய சந்ததியையும் பிரதிஷ்டை செய்தார் என்று ஆதியாகமம் 12:3, 22:18 மற்றும் 26:4 போன்ற வேதபகுதிகள் கூறுகின்றன. இக்கருப்பொருள் யோசேப்பின் உலகத்தில், முக்கியமாக, யோசேப்பு எகிப்தில் ஆளுகை செய்து, மற்றவர்களின் ஆசீர்வாதங்களுக்கு வழிவகுத்தபோது நிறைவேறியது. உதாரணமாக, ஆதியாகமம் 39:5 இல் யோசேப்பு போத்திபாரின் வீட்டிற்கு ஆசீர்வாதமாக இருந்தார். பார்வோனின் சிறைச்சாலை அதிகாரிக்கு ஆதியாகமம் 39:22 இல் அவர் ஆசீர்வாதமாக இருந்தார். பார்வோனின் சொப்பனத்தை 41:25 இல் வியாக்கியானம் செய்தபோது, யோசேப்பு பார்வோனை ஆசீர்வதித்தார். ஆனால், எல்லாவற்றிலும் மிகப்பெரிய ஆசீர்வாதங்கள், யோசேப்பு அதிகாரத்தின் உச்சக்கட்டத்தில் இருந்தபோது எகிப்தியருக்கும் மற்றும் பல தேசங்களுக்கும் ஆசீர்வாதமாக இருந்தபோது கிடைத்தன. ஆதியாகமம் 41:56-57 இவ்வாறு கூறுகிறது:



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> தேசமெங்கும் பஞ்சம் உண்டானபடியால், யோசேப்பு களஞ்சியங்களையெல்லாம் திறந்து, எகிப்தியருக்கு விற்றான்; … சகல தேசங்களிலும் பஞ்சம் கொடிதாயிருந்தபடியால், சகல தேசத்தார்களும் யோசேப்பினிடத்தில் தானியம் கொள்ளும்படி எகிப்துக்கு வந்தார்கள் (ஆதியாகமம் 41:56-57).

இஸ்ரவேலர் மூலம் மற்றவர்களுக்குக் கிடைத்த ஆசீர்வாதம் என்னும் கருப்பொருள் எப்படி மோசேயின் ஆதி வாசகர்களின் "உலகத்திற்குப்" பொருந்தியது என்று காண்பது எளிதாகும். முதலில், யோசேப்பின் கதையைக் கேட்ட இஸ்ரவேலர்கள், தங்கள் முற்பிதாக்கள் ஏற்கனவே மற்றவர்களுக்கு ஆசீர்வாதமாக இருந்திருக்கிறார்கள் என்பதை அறிந்து உற்சாகம் கொண்டிருப்பார்கள். தாங்களும் தங்கள் காலத்தில் மற்றவர்களுக்கு தேவனுடைய ஆசீர்வாதங்களைக் கொண்டு செல்லும்படி தேவனால் அழைக்கப்பட்டிருக்கிறோம் என்பதையும் உணர்ந்திருப்பார்கள். பிற்பாடு அவர்களுடைய சந்ததியார் முழு உலகத்திற்கும் தேவனுடைய ஆசீர்வாதங்களை பரப்புவார்கள் என்பதையும் எதிர்நோக்கியிருந்திருப்பார்கள்.

நீங்கள் எதிர்பார்க்கிறபடி, இக்கருப்பொருள் நம் உலகத்திற்கும் பொருந்தும். கிறிஸ்து தம் ராஜ்யத்தின் துவக்கத்தில் இவ்வுலகத்திற்கு ஆசீர்வாதங்களை அருளினார். அவர் தொடர்ந்து தம் ராஜ்யம் செயல்படுகையில் சபையின் மூலம் உலகத்தை ஆசீர்வதிக்கிறார். ஒருநாளில், புதிய சிருஷ்டிப்பின்போது, தம்முடைய ராஜ்யத்தின் உச்சக்கட்டத்தில், இவ்வுலகத்தின் சகல ஜனங்களையும் தேசங்களையும் அவர் ஆசீர்வதிப்பார்.

## சிறப்பு முக்கியத்துவம்

யோசேப்பின் கதையில் உள்ள முக்கிய கருப்பொருள்களை நாம் ஆராய்ந்ததால், யோசேப்பின் கதைக்கும் ஆதியாகமத்தில் மீதமுள்ள முற்பிதாக்களின் வரலாற்றிற்கும் இடையில் பகிரப்பட்ட சில முக்கியத்துவங்களை நாம் குறிப்பிட்டுள்ளோம். யோசேப்பின் கதையில் தெளிவாகக் காணப்படும் இரண்டு சிறப்பு முக்கியத்துவம் குறித்து இப்போது நாம் கவனம் செலுத்த வேண்டும். முன்னதாக இந்த பாடத்தில் நாம் இதை முன்மொழிந்தோம்:

> யோசேப்பையும், அவருடைய சகோதரரையும் குறித்த கதை, இஸ்ரவேல் கோத்திரங்கள் வாக்குத்தத்த தேசத்தை சுதந்தரித்து அதில் குடியேறும்போது எவ்வாறு இசைந்து வாழ வேண்டும் என்பதை அவர்களுக்குப் போதித்தன.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

நாம் ஏற்கனவே பார்த்தபடி, ஆதியாகமத்தின் இந்த பகுதியின் பெரும்பகுதி யோசேப்பு மற்றும் அவரது சகோதரர்களுக்கிடையேயான ஒற்றுமையின்மை மற்றும் நல்லிணக்கத்துடன் தொடர்புடையது. மேலும் யோசேப்பு மற்றும் அவரது சகோதரர்கள் இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரங்களின் பிதாக்கள் ஆவார்கள். எனவே, இந்த தொடர்புகள் மோசேயின் காலத்தில் இஸ்ரவேல் கோத்திரத்தார்களுக்கிடையில் இருந்த தொடர்புகளுடன் நேரடியாக இணைக்கப்பட்டது. ஆதியாகமம் 50:24-25 இல் யோசேப்பின் கடைசி வார்த்தைகளைக் கவனியுங்கள், அங்கு இந்த இணைப்பு முன்புறத்திற்கு நகர்கிறது:

> யோசேப்பு தன் சகோதரரை நோக்கி: "நான் மரணமடையப்போகிறேன். ஆனாலும் தேவன் உங்களை நிச்சயமாய்ச் சந்தித்து, நீங்கள் இந்தத் தேசத்தை விட்டு, தாம் ஆபிரகாமுக்கும் ஈசாக்குக்கும் யாக்கோபுக்கும் ஆணையிட்டுக் கொடுத்திருக்கிற தேசத்துக்குப் போகப் பண்ணுவார்." "தேவன் உங்களைச் சந்திக்கும்போது, என் எலும்புகளை இவ்விடத்திலிருந்து கொண்டுபோவீர்களாக" என்றும் சொல்லி; யோசேப்பு இஸ்ரவேல் புத்திரரிடத்தில் ஆணையிடுவித்துக் கொண்டான் (ஆதியாகமம் 50:24-25).

மோசேயின் ஆதி வாசகர்களின் உலகத்திற்கும் யோசேப்பின் நாளில் இருந்த உலகத்திற்கும் இடையே இந்த வேதபகுதி ஏற்படுத்திய தொடர்பை மிகைப்படுத்துவது கடினம். ஆதியாகமத்தின் ஆதி வாசகர்களின் வாழ்க்கையில் என்ன நடக்கும் அல்லது வாக்குத்தத்த தேசத்தில் அவர்கள் நுழைவார்கள் என்கிற யோசேப்பின் வெளிப்படையான எதிர்பார்ப்புடன் மோசே யோசேப்பு மற்றும் அவரது சகோதரர்களின் கதையை முடித்தார்.

யோசேப்பின் கடைசி வார்த்தைகளுக்கும் ஆதி வாசகர்களின் அனுபவங்களுக்கும் இடையிலான இந்த தொடர்பின் தாக்கங்களை தொகுக்க பல வழிகள் உள்ளன. ஆனால் நம் நோக்கங்களுக்காக, நாம் இரண்டு சிறப்பான முக்கியத்துவங்களைப் பார்ப்போம். முதலில், மோசேயின் காலத்தில் இஸ்ரவேல் கோத்திரத்தாரிடையே தேசிய ஒற்றுமையை ஊக்குவிக்க யோசேப்பு மற்றும் அவரது சகோதரர்களின் கதை எவ்வாறு வடிவமைக்கப்பட்டது என்று பார்ப்போம். இரண்டாவதாக, இஸ்ரவேல் கோத்திரத்தாரிடையே தேவன் விதித்த தேசிய பன்முகத்தன்மையை அவரது வார்த்தைகள் எப்படி ஒப்புக் கொண்டன என்பதைப் பார்ப்போம். தேசிய ஒற்றுமை என்கிற கருப்பொருளை முதலில் பார்ப்போம்.

## தேசிய ஒற்றுமை

தேசிய ஒற்றுமையின் கருப்பொருளின் முக்கியத்துவத்தைப் பார்க்க, யோசேப்பு மற்றும் அவரது குடும்பத்தின் கதை ஆதியாகமத்தில் மீண்டும்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

மீண்டும் தோன்றும் வடிவத்திலிருந்து விலகுகிறது என்பதை நாம் சுட்டிக்காட்ட வேண்டும். "பிரத்தியேக வாரிசுரிமை" என்று இதை நாம் அழைக்கலாம். பிரத்தியேக வாரிசுரிமை என்பதன் மூலம் தேவனின் விசேஷ ஆதரவை காலப்போக்கில் ஒரு முக்கிய நபர் அல்லது முற்பிதா மூலம் கடந்து செல்வதைக் குறிக்கிறோம்.

இதைப் பற்றி இப்படி யோசித்துப் பாருங்கள்: ஆதியாகமம் 1:1–11:9 இல் உள்ள ஆதி வரலாற்றில், தேவன் முதலில் ஆதாமையும் அவருடைய சந்ததியினரையும் உலகம் முழுவதும் நிரப்பவும் ஆட்சி செய்யவும் நியமித்தார். அவர்கள் தேவனின் மகிமையான ராஜ்யத்தை பூமி முழுவதும் பரப்ப வேண்டும் என்பது தான் அவர்களுக்கு கொடுக்கப்பட்ட கட்டளையாகும். ஆனால் பாவம் உலகத்தில் பிரவேசித்தவுடன் இந்த வாக்குத்தத்தம் சேத்துக்கு மட்டுமே சென்றது, காயீனுக்கு செல்லவில்லை. தேவன் நோவாவுடனான உடன்படிக்கையை பிரத்தியேகமாக உறுதிப்படுத்தும் வரை தேவனின் சிறப்பு தயவு சேத்தின் வம்சாவளியைச் சென்றது. சேம், காம் மற்றும் யாப்பேத் ஆகிய மூன்று குமாரர்கள் நோவாவுக்கு இருந்தார்கள். ஆனால் தேவனின் வாக்குத்தத்தங்கள் சேமின் வம்சத்தில் பிரத்தியேகமாக நிறைவேற்றப்பட்டன. ஆதி வரலாற்றின் முடிவில், சேமின் வாரிசான ஆபிரகாம் தேவனுடைய வாக்குத்தத்தங்களின் பிரத்தியேக வாரிசாவார்.

ஆதியாகமம் 11:10–37:1 இல் உள்ள முந்தைய முற்பிதாக்களின் வரலாறு இந்த பிரத்தியேகமான தொடர்ச்சியை தொடர்கிறது. ஆபிரகாமிற்குரிய வாக்குத்தத்தங்கள் இஸ்மவேல் மற்றும் ஆபிரகாமின் மற்ற குமாரர்களுக்கு பதிலாக ஈசாக்கிற்கு மட்டுமே வழங்கப்பட்டன. ஈசாக்கிற்கு தேவன் கொடுத்த வாக்குத்தத்தங்கள் ஏசாவுக்கு பதிலாக யாக்கோபுக்கு மட்டுமே வழங்கப்பட்டன.

ஆதியாகமத்தின் முதல் 36 அதிகாரங்களில் இந்த பிரத்யேக வாரிசு முறை எவ்வளவு முக்கியமாக இருந்தாலும், அது யோசேப்பு மற்றும் அவரது சகோதரர்களின் கதையுடன் திடீரென முடிவுக்கு வருகிறது. ஆதியாகமத்தின் இந்த பகுதியில், மோசே "உள்ளடக்கிய வாரிசு" வை வலியுறுத்தினார். தேவனுடைய விசேஷித்த தயவு யாக்கோபிலிருந்து அவருடைய குமாரர்களில் ஒருவருக்கு மட்டுமல்லாமல் பன்னிரண்டு பேருக்கும் சென்றது என்று அவர் நம்பினார். யாக்கோபு இறந்தபோது, அவருடைய பன்னிரண்டு குமாரர்கள் மற்றும் அவர்களின் சந்ததியினர், இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரத்தார், வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட நிலத்தின் யாக்கோபின் சுதந்தரத்தில் பங்கை பெற்றனர். யாக்கோபின் சுதந்திரத்தை அவரது அனைத்து குமாரர்களுக்கும் பங்காக கொடுத்தது மோசேயின் இஸ்ரவேல் வாசகர்களை தேசிய ஒற்றுமைக்கு அழைத்தது.

> நாம் யாக்கோபு மற்றும் யோசேப்பு மற்றும் அவரது சகோதரர் யூதாவின் கதையைப் படிக்கும்போது, இந்த குடும்பத்தில் நிறைய குழப்பங்கள், நிறைய மோதல், பொறாமை,



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> சச்சரவுகள் இருப்பதை உணர்கிறோம், மேலும் தேவன் தனது உடன்படிக்கை சமூகம் இந்த வழியில் வாழ்வதை விரும்பவில்லை. எனவே, தேவன் உடன்படிக்கை சமூகத்தில் ஒற்றுமையை ஏற்படுத்த எப்படி வேலை செய்கிறார் என்பதற்கு இந்த கதை ஒரு முன்னுதாரணமாகிறது. யோசேப்பும் யூதாவும் ஒன்றிணைந்தனர், அவர்களுக்குள் மோதல் அதன் பிறகு இல்லை. இது பிற்காலத்தில் மக்களுக்கு ஒரு நல்ல உதாரணமாகும். யோசேப்பும் யூதாவும் இஸ்ரவேலில் உள்ள இரண்டு பெரிய கோத்திரங்கள் ஆவர். உடன்படிக்கை சமூகத்தில் தேவன் விரும்பும் மற்றும் உருவாக்க முயற்சிக்கும் ஒற்றுமைக்கு இது ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும்.
>
> – Dr. ராபர்ட் பி. கிஷோல்ம், Jr.

நாம் முன்பு பார்த்தது போல், யோசேப்பு மற்றும் அவரது சகோதரர்களின் கதை ஒருவருக்கொருவர் எதிரான சகோதரர்களின் பாவங்களால் ஏற்பட்ட ஒற்றுமையின்மையுடன் தொடங்கியது. ஆனால் அது சகோதரர்களிடையே நல்லிணக்கத்துடன் முடிந்தது. இந்த வழியில், தேவன் இஸ்ரவேல் கோத்திரத்தார்  தேசிய ஒற்றுமையைத் தேட அழைப்பு விடுத்தார் என்பதை மோசேயின் கதை அவரைப் பின்தொடரும் அனைவருக்கும் தெளிவுபடுத்தியது. யோசேப்பின் கதையை விளக்கியது போல், இஸ்ரவேலர் அனைவரும் ஆபிரகாம், ஈசாக்கு மற்றும் யாக்கோபு ஆகியோருக்கு தேவன் கொடுத்த வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட நிலத்தின் சுதந்திரத்தின் பங்கைப் பெற்றனர்.

மற்ற இடங்களில் இஸ்ரேவேல் கோத்திரத்தாரிடையே ஒற்றுமை குறித்து மோசே உரையாற்றியதில் ஆச்சரியமில்லை. உதாரணமாக, யாத்திராகமம் 19:8 இல், இஸ்ரவேலர்கள் அனைவரும் சினாய் மலையில் தேவனுடன் உடன்படிக்கை செய்ய ஒருமனதாக ஒப்புக்கொண்டதாக அவர் வலியுறுத்தினார். எண்ணாகமம் 32 மற்றும் யோசுவா 1:12-18 இல், மோசே மற்றும் யோசுவா இருவரும் கோத்திரத்தார் அனைவரும் கானான் தேசத்தில் ஒன்றாகப் போராட வேண்டும் என்று வலியுறுத்தினர். உபாகமம் 29:2 ல் உடன்படிக்கையை புதுப்பித்தலுக்காக மோசே அனைத்து கோத்திரத்தாரையும் ஒன்று சேர்த்தார்.

இதற்கும் மேல், இஸ்ரவேலின் தேசிய ஒற்றுமை பிற்கால பழைய ஏற்பாட்டு எழுத்தாளர்களால் வலியுறுத்தப்பட்டது. தாவீது மற்றும் சாலமோனின் தோல்விகள் இருந்தபோதிலும், ஒன்றுபட்ட முடியாட்சியின் காலம் இஸ்ரவேலின் பொற்காலமாக கருதப்பட்டது. தேசத்தை வடக்கு மற்றும் தெற்கு ராஜ்யங்களாகப் பிரிப்பது தேவனின் நோக்கத்திற்கு எதிரானதாக அமைந்தது. சிறையிருப்புக்கு பிறகு கோத்திரத்தார் மீண்டும் ஒன்றிணைவார்கள் என்று இஸ்ரவேலின் தீர்க்கதரிசிகள் வாக்குத்தத்தம் அளித்தனர். மேலும் நாளாகமம்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

போன்ற புத்தகங்கள், ஒவ்வொரு கோத்திரத்தின் பிரதிநிதிகளும் சிறையிருப்புக்கு பிறகு வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தில் குடியேற வேண்டும் என்று வலியுறுத்தின.

யோசேப்பு மற்றும் அவரது சகோதரர்களாகிய பன்னிரண்டு கோத்திர பிதாக்களின் ஒற்றுமைக்கு மோசே முக்கியத்துவம் அளித்தது இஸ்ரவேல் கோத்திரத்தாரிடையே தேசிய ஒற்றுமையை ஊக்குவித்தது. இந்த முக்கியத்துவம் யோசேப்பு மற்றும் அவரது சகோதரர்களின் கதை நமது நவீன உலகிற்குப் பயன்படுத்தப்பட வேண்டிய முக்கிய வழிகளில் ஒன்றைச் சுட்டிக்காட்டுகிறது. இஸ்ரேவேல் கோத்திரத்தார் ஒரு பொதுவான சுதந்திரத்தைப் பகிர்ந்துகொண்டது போல, உலகில் எல்லா இடங்களிலும் கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்கள் அனைவரும் கிறிஸ்துவில் பொதுவான சுதந்திரத்தைப் பகிர்ந்து கொள்கிறார்கள். இயேசு தனது ராஜ்யத்தின் தொடக்கத்தில் இந்த ஒற்றுமையை நிறுவினார். கிறிஸ்துவின் ராஜ்யத்தின் தொடர்ச்சி முழுவதும் இந்த ஒற்றுமையை நாம் தொடர வேண்டும். கிறிஸ்துவின் ராஜ்யத்தின் நிறைவில் தேவனின் மக்களிடையே சரியான ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்தில் நாம் ஒரு நாள் மகிழ்ச்சியடைவோம். பவுல் எபேசியர் 4:3-6 இல் சொல்வதைக் கவனியுங்கள்:

> சமாதானக்கட்டினால் ஆவியின் ஒருமையைக் காத்துக்கொள்வதற்கு ஜாக்கிரதையாயிருங்கள். உங்களுக்கு உண்டான அழைப்பினாலே நீங்கள் ஒரே நம்பிக்கைக்கு அழைக்கப்பட்டதுபோல, ஒரே சரீரமும் ஒரே ஆவியும் உண்டு; ஒரே கர்த்தரும், ஒரே விசுவாசமும், ஒரே ஞானஸ்நானமும், எல்லாருக்கும் ஒரே தேவனும் பிதாவும் உண்டு; அவர் எல்லார்மேலும், எல்லாரோடும், உங்கள் எல்லாருக்குள்ளும் இருக்கிறவர் (எபேசியர் 4:3-6).

இந்தப் பகுதியில் உள்ள அறிவுபூர்வத்தைக் கவனியுங்கள். பவுல் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர்களை “சமாதானக்கட்டினால் ஆவியின் ஒருமையைக் காத்துக்கொள்வதற்கு ஜாக்கிரதையாயிருக்கும்படி” அழைப்பு விடுக்கிறார். இஸ்ரவேலின் கோத்திரங்களிடையே பகிர்ந்து கொள்ளப்பட்ட சுதந்தரத்தைப் போல, நம் எல்லோருக்கும் பொதுவான ஒரே சரீரம், ஒரே பரிசுத்த ஆவி, ஒரே நம்பிக்கை, ஒரே கர்த்தர், ஒரே விசுவாசம், ஒரே ஞானஸ்நானம், மற்றும் ஒரே தேவன் உண்டு.

யோசேப்பு மற்றும் அவரது சகோதரரின் கதை இன்று நம்மிடையே அடிக்கடி எழும் இசைவின்மையை நமக்கு நினைவுறுத்த பல தருணங்களைக் கொடுக்கிறது. மேலும் அது, உலகெங்குமுள்ள தேவஜனங்களின் ஒற்றுமைக்காக நம்மை அர்ப்பணிக்கும்போது, நடைமுறையில் அதிகமாக நம்மை வழிநடத்துவதாகவும் உள்ளது.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> யோசேப்பு முற்றிலும் மன்னிப்பால் நிறைந்திருந்ததால், யோசேப்பின் கதை இஸ்ரவேலரிடையே தேசிய அளவிலான ஒற்றுமையை உற்சாகப்படுத்தியது. இஸ்ரவேலருக்கு மட்டுமல்ல, கிறிஸ்தவர்களாகிய நமக்கும், நம் குடும்பங்களுக்கும், இந்த உலகத்தில் நாம் வாழும் வாழ்க்கையை ஒன்றாக்கும் ஒரே காரணியாக இருப்பது மன்னிப்பே. யோசேப்பு தன் சகோதரரால் மிக அதிகமாகத் தவறாக நடத்தப்பட்டார், ஆனால் அவர்களுக்கு பிரச்சனை வந்தபோது, இவர் அவர்களைக் காப்பாற்றினார்... யோசேப்பின் கதையில் அவர் எப்படி மன்னித்தார் என்பதைப் பார்க்கும்போது, அவர் உண்மையில் மிகப்பெரிய அளவில் மன்னித்திருக்கிறார் என்பது தெரிய வரும். அவர் மரித்துப் போக வேண்டுமென்று அவர்கள் நினைத்தார்கள். அவர் உயிருடன் இருக்க வேண்டுமென்று அவர்கள் நினைக்கவேயில்லை. அவர்கள் இனி அவரைச் சந்திக்கவே விரும்பவில்லை. ஆனால் யோசேப்போ அவர்களுக்குத் தீமை செய்ய நினைக்கவில்லை. அவருக்கு அதைச் செய்வதற்கான அதிகாரமும் வழியும் இருந்தது, ஆனால் அவர் அவர்களை விட அதிக தேவபக்தியுள்ளவராகவும், விசுவாசத்தில் அதிகம் முதிர்ந்தவராகவும் விளங்கி, அவர்களைச் சேர்த்துக் கொண்டார். இதை மறுபடியும் செய்ய முடியும், இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரங்களிலும் அதை அப்படியே செய்ய முடியும், நம்மிலும், நம் குடும்பங்களிலும், நம் சபைகளிலும், அதை அப்படியே செய்ய முடியும். நம் சமுதாயத்திலும் அதை மீண்டும் செய்ய முடியும்.
>
> – Rev. Dr. சைப்ரியன் கே. குஷியெண்டா

மோசேயின் விசேஷித்த வலியுறுத்தல் இஸ்ரவேல் தேசத்தாரின் ஒற்றுமையை அதிகரித்தது என்பதை உணரும் நாம், அதை மோசே செய்தது ஏன் என்பதை அறிவதும் அவசியமாகும். சுருக்கமாகச் சொன்னால், தேவன் தம் ஜனத்திற்கு தேசிய அளவிலான வேற்றுமைகளை நியமித்திருந்ததால், மோசே ஒற்றுமைக்கான அவசியத்தை வலியுறுத்தினார்.

## தேசிய வேற்றுமைகள்

எளிமையாகச் சொன்னால், கோத்திரப் பிதாக்கள் எல்லோருமே யாக்கோபின் சந்ததியார்தான் என்பதால் அவர்கள் அனைவருமே ஒரேவிதமாக நடத்தப்பட்டார்கள் என்று அர்த்தமல்ல. இதற்கு மாறாக, தேவன் இஸ்ரவேல் கோத்திரங்களுக்கு வெவ்வேறு சிலாக்கியங்களையும், பொறுப்புகளையும்

கொடுத்தார் என்பது பழைய ஏற்பாடு முழுவதும் தெளிவாக விளக்கப்படுகிறது. தேவன் தாமே தங்கள் கோத்திரங்களுக்கு வெவ்வேறு சிலாக்கியங்களையும், பொறுப்புகளையும் நியமித்திருக்கிறார் என்பதை இஸ்ரவேலர் ஏற்றுக் கொண்டால் மட்டுமே அவர்களால் ஒற்றுமையைக் காத்துக் கொள்ள முடியும் என்ற முக்கியமான காரணத்திற்காக இஸ்ரவேல் கோத்திரங்கள் இசைந்திருக்க வேண்டுமென்று மோசே வலியுறுத்தினார்.

ஒற்றுமை என்னும் கருப்பொருளைப் போல, வேற்றுமை என்னும் கருப்பொருளும் யோசேப்பு மற்றும் அவரது சகோதரரின் கதை முழுவதும் பின்னிப் பிணைந்துள்ளது. அதேசமயம், அது ஆதியாகமம் 47:28-49:33 இல் வெளிப்படையாகத் தெரிகிறது. இந்த அதிகாரங்களில், யாக்கோபு தன் சுதந்தரத்தை தன் பன்னிரண்டு குமாரருக்கும் பங்கிட்டுக் கொடுத்ததோடு, அவர்களுக்கும், அவர்களுடைய சந்ததிக்கும் மத்தியில் நிலைத்திருக்கும் வேற்றுமைகளையும் உறுதிப்படுத்தினார்.

இந்த அதிகாரங்களில், மோசே யாக்கோபின் குமாரருக்கு இடையேயான வித்தியாசங்களைக் காண்பித்து, இஸ்ரவேலரின் தேசிய வேற்றுமையை வெளிப்படுத்தினார். இருப்பினும், நம் நோக்கங்களுக்கேற்ப, யூதாவும் அவருடைய சந்ததியும், யோசேப்பும் அவருடைய சந்ததியும் என்ற இரு கோத்திரங்களை மட்டும் பார்ப்போம். யூதா மற்றும் அவருடைய சந்ததி கனம் பண்ணப்பட்டதை முதலில் காண்போம்.

**யூதாவும் அவருடைய சந்ததியும்.** யூதாவுக்கும் அவரது சந்ததிக்கும் தேவன் நியமித்திருந்த முக்கியத்துவத்தை உறுதிப்படுத்தும்படி மோசே இந்த அதிகாரங்களில் பலமுறை யூதாவை மையப்பகுதிக்குக் கொண்டு வந்தார். ஆதியாகமம் 37:12-36 இல் சகோதரர்கள் யோசேப்பைக் கொல்ல முயற்சி செய்யுமிடத்தில் யூதா முதன்முறையாக குறிப்பிடப்படுகிறார். 26-27 வசனங்களில் யூதா தன் சகோதரரில் தனித்து நின்று, யோசேப்புக்காகப் பரிந்து பேசி வெற்றியும் பெற்றார். 27-ஆம் வசனத்தில் யூதா, "அவன் [யோசேப்பு] நம்முடைய சகோதரனும் நம்முடைய மாம்சமுமாய் இருக்கிறானே" என்று அவர்களுக்கு நினைவுபடுத்தி, சகோதரருக்கு இடையே இருக்க வேண்டிய ஒற்றுமையை வலியுறுத்துகிறார். யூதாவின் திட்டத்திற்கு சகோதரர்கள் ஒப்புக் கொண்டதிலிருந்து அவருடைய தலைமைத்துவத்தை அவர்கள் ஏற்றுக் கொண்டது தெரியவருகிறது.

38:1-30 இல் கானானில் யூதா செய்த பாவத்தை மோசே நினைவுபடுத்துகிற பகுதியில் மீண்டும் யூதா வருகிறார். இந்தப் பகுதி, போத்திபாரின் வீட்டில் யோசேப்பின் உத்தமத்தையும் யூதாவின் ஒழுக்கக்கேட்டையும் முரண்படுத்திக் காண்பிக்கிறது. ஆனால், 38:26 இல், யூதா, "என்னிலும் அவள் [தாமார்] நீதியுள்ளவள்" என்று ஒப்புக் கொண்டபோது, மோசே யூதாவின் தாழ்மையான அறிக்கையிடுதலை வெளிப்படுத்தினார். தேவன் யூதாவின் மனந்திரும்புதலை ஏற்றுக் கொண்டார் என்பது தெளிவாகிறது, ஏனென்றால் அதன் பின்னர்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

தேவன் யூதாவுக்கு பேரேஸ், சேரா என்னும் இரட்டைப் பிள்ளைகளைக் கொடுத்து ஆசீர்வதிக்கிறார்.

44:14-34 இல், முற்பிதாக்களின் இரண்டாம் பிரயாணத்தின்போது, மோசே மீண்டும் யூதாவின் தலைமைத்துவத்தின் மீது கவனத்தைத் திருப்புகிறார். பென்யமீன் வெள்ளிப்பாத்திரத்தை திருடிக் கொண்டான் என்று குற்றஞ்சாட்டப்பட்டபோது, யோசேப்பின் முன்னிலையில் யூதா முன்வந்து இரக்கத்திற்காக கெஞ்சினான். அவன் தன்னையும் தன் சகோதரரையும் யோசேப்பின் ஊழியக்காரரர் என்று சொல்லி தாழ்மையாகப் பேசினான். “உம்முடைய அடியாரின் அக்கிரமத்தை தேவன் விளங்கப்பண்ணினார்” என்று தானும் தன் சகோதரரும் செய்ததை அறிக்கையிட்டு மனந்திரும்புதலை வெளிப்படுத்தினான். பென்யமீன் கானானுக்குத் திரும்பாவிட்டால் தன் “தகப்பனுக்கு நேரிடும் தீங்கைக்” குறிப்பிட்டு தன் தகப்பனை கனம் பண்ணினான். “இளையவனுக்குப் பதிலாக” எகிப்தில் இருக்க தைரியத்துடன் முன்வந்தான்.

இறுதியாக, 49:1-28 இல், யாக்கோபின் இறுதி ஆசீர்வாதங்களின்போது யூதா முன்னணியில் வந்துவிட்டார். 8-12 வசனங்களில், யூதாவும் அவனுடைய கோத்திரமும் எதிர்க்க முடியாத ஒரு தலைமைத்துவ ஸ்தானத்திற்கு வருவார்கள் என்று யாக்கோபு அறிவித்தார். யூதா கோத்திரம் ஒருநாள் இஸ்ரவேலின் ராஜரீக கோத்திரமாகும். ஆதியாகமம் 49:8-10 இல் யாக்கோபு சொல்வதைக் கவனியுங்கள்:

> யூதாவே, சகோதரரால் புகழப்படுபவன் நீயே; உன் கரம் உன் சத்துருக்களுடைய பிடரியின்மேல் இருக்கும்; உன் தகப்பனுடைய புத்திரர் உன்முன் பணிவார்கள். யூதா பாலசிங்கம், நீ இரை கவர்ந்துகொண்டு ஏறிப்போனாய்; என் மகனே, சிங்கம்போலும் கிழச்சிங்கம்போலும் மடங்கிப் படுத்தான்; அவனை எழுப்புகிறவன் யார்? சமாதான கர்த்தர் வருமளவும் செங்கோல் யூதாவைவிட்டு நீங்குவதும் இல்லை, நியாயப்பிரமாணிக்கன் அவன் பாதங்களை விட்டு ஒழிவதும் இல்லை; ஜனங்கள் அவரிடத்தில் சேருவார்கள் (ஆதியாகமம் 49:8-10).

இங்கு, யூதாவின் “சகோதரர்கள் அவனைப் புகழுவார்கள்” என்று சொல்லப்பட்டிருப்பதைக் கவனியுங்கள். அவன் “கரம் அவனுடைய சத்துருக்களின் பிடரியின் மேல் இருக்கும்” என்பதற்கு, அவனை எதிர்க்கும் எல்லோரையும் அவன் மேற்கொள்வான் என்று அர்த்தம். யூதாவின் “தகப்பனுடைய புத்திரர்” – அவனுடைய சகோதரர் – “அவன் முன் பணிவார்கள்.” அவனுடைய முந்தைய பண்புவிளக்கத்திற்கு ஏற்ப, யூதாவின் கோத்திரம் இஸ்ரவேலின் மற்ற கோத்திரங்கள் மீது அதிகாரம் செலுத்தும் என்று மோசே குறிப்பிட்டிருக்கிறார்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

ராஜரீகத்தின் அடையாளங்களாக விளங்கும் “செங்கோலும்” “ஆளுகிறவனின் கோலும்” யூதாவின் சந்ததியில் ஒருவரிடம் இருக்கும். யூதாவின் ராஜரீக சந்ததி “அதற்குரியவர் வருமளவும், தேசங்கள் அவருக்குக் கீழ்ப்படியுமளவும்” தொடர்ந்து ஆளுகை செய்யும்.

யூதாவின் சந்ததியில் தோன்றும் ஒருவர் முழு உலகத்திற்கும் ராஜாவாக இருப்பார் என்னும் உண்மையை முதல் முறையாக வேதம் ஆதியாகமம் 49:10 இல் வெளிப்படையாகக் கூறுகிறது. இது, தாவீதின் சந்ததியில் தோன்றும் மேசியாவைத் தெளிவாகக் குறிப்பதாக உள்ளது. இந்த எதிர்கால ராஜா ஆதியாகமம் 12:3 இல், “பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும்” என்று ஆபிரகாமுக்குக் கொடுத்த வாக்குத்தத்தத்தை நிறைவேற்றுவார். இந்த ராஜாவின் மூலமாக தேவனுடைய ராஜ்யம் பூமி முழுவதையும் சென்றடையும். “ஜாதிகளின் கீழ்ப்படிதல்” யூதாவிலிருந்து தோன்றும் இந்த மகாராஜாவுக்குக் கொடுக்கப்படும்.

தங்களுக்குரிய உலகத்தில் இருந்த ஆதி வாசகர்களுக்கு, யூதா அவருடைய உலகத்தில் உயர்த்தப்பட்டதை ஏன் மோசே வலியுறுத்தினார் என்பதை விளங்கிக் கொள்வது கடினமல்ல. யூதா யாக்கோபின் முதல் குமாரனாக இல்லாததால், சாதாரணமாக அத்தகைய முக்கியத்துவம் அவருக்குக் கிடைத்திருக்காது. ஆகவே, தேசத்தின் ஒற்றுமையை உற்சாகப்படுத்த மோசே யோசேப்பையும் அவரது சகோதரர்களையும் பற்றி எழுதியிருந்த அதே நேரத்தில், தேவன் இவ்விதமாக யூதாவை உயர்த்தினார் என்னும் உண்மையின் அடிப்படையில் அவர்கள் அந்த ஒற்றுமையைக் காத்துக் கொள்ள வேண்டுமென்றும் எதிர்பார்த்தார்.

நம் உலகத்தில் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர்களுக்கும் யூதாவின் உயர்வு பல தாக்கங்களை ஏற்படுத்துகிறது. ஆனால், யூதா கோத்திரத்தில் தேவன் தன்னிகரற்ற ஒரு ராஜாவை வாக்குப்பண்ணினார் என்னும் உண்மையே இவையெல்லாவற்றிற்கும் மையமாக விளங்குகிறது. இந்த வாக்குத்தத்தம் அண்டசராசரத்தின் ராஜாவும், தாவீதின் பரிபூரண நீதியின் குமாரனுமாகிய இயேசுவில் நிறைவேறியது. இயேசு தம் ராஜ்யத்தின் துவக்கத்தில் பரலோகத்தில் உள்ள தம் சிங்காசனத்தில் அமர்ந்தார். அவருடைய சத்துருக்கள் அனைவரும் அவருக்குப் பாதபடியாகும் வரை தம் ராஜ்யத்தில் தொடர்ந்து ஆளுகை செய்து கொண்டிருக்கிறார். அவரது ராஜ்யத்தின் உச்சக்கட்டத்தில், அவர் புதிய உலகத்தில் என்றென்றும் அரசாளுவார்.

யூதா மற்றும் அவரது சந்ததி மீது கவனத்தைத் திருப்புவதன் மூலம் மோசே எவ்வாறு தேசத்தின் வேற்றுமையை வலியுறுத்தினார் என்பதைப் பார்த்த நாம், ஆதியாகமத்தின் இப்பகுதியில் தெளிவான முக்கியத்துவம் பெற்றிருக்கும் யோசேப்பையும் அவரது சந்ததியையும் பற்றிப் பார்க்கவிருக்கிறோம்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

**யோசேப்பும், அவரது சந்ததியும்.** நாம் பார்த்தபடி, யோசேப்புதான் ஆதியாகமம் 37:2-50:26 இன் முக்கிய கதாபாத்திரம் ஆவார். ஆனால், இந்த அதிகாரங்களில் யோசேப்பு அவருடைய சகோதரரைப் போலல்லாமல் பூரண புருஷனாக கூறப்படுகிறார். யோசேப்பின் குணத்தில் தவறு இருந்ததாக ஆரம்பத்தில் ஒரு இடத்தில் மட்டுமே மோசே குறிப்பிட்டிருக்கிறார். 37:2-11 இல், யோசேப்பு தன் சகோதரருக்கு எரிச்சல் மூட்டினார் என்று காண்கிறோம். அவர்களைப் பற்றிய மோசமான காரியங்களைத் தன் தகப்பனுக்குத் தெரிவித்து, எதிர்காலத்தைப் பற்றிய தன் கனவுகளைக் குறித்து பெருமைபாராட்டினார். ஆனால் இந்த ஒரேயொரு எதிர்மறையான காரியமும் குறிப்பிடத்தக்க அளவில் இல்லை. 2 ஆம் வசனத்தில் யோசேப்பின் வயது "பதினேழு" என்று குறிப்பிடுவதன் மூலம் அதை மோசே இன்னும் குறைத்துக் காண்பிக்கிறார்.

இந்தச் சிறு குறைபாட்டைத் தவிர யோசேப்பைப் பற்றிய மற்ற அனைத்துக் குறிப்புகளுமே நேர்மறையானவைதான். யோசேப்பு போத்திபாரிடம் உண்மையாக வேலை செய்தார். போத்திபாரின் மனைவியை தடுத்தார். பார்வோனுக்கு ஊழியம் செய்ததிலும் எந்தத் தவறும் செய்யவில்லை. தன் சகோதார்கள் வந்தபோது அவர்களை ஞானமாக சோதித்தார். அவர்கள் அவருக்குத் தீமை செய்திருந்தபோதும் அவர்களை மென்மையாக நடத்தினார். தன் தகப்பன் மற்றும் பென்யமீன் மீது அன்பு செலுத்தினார். எகிப்தின் தலைவனாக இருந்து அநேக தேசங்களை ஆசீர்வதித்தார். இவ்விதமாகவும், இன்னும் பல விதங்களிலும், ஆதியாகமம் 49:26 இல் யாக்கோபு அவரைப் பற்றிச் சொன்ன விதத்தில் மோசே அவரைச் சித்தரித்திருக்கிறார். யோசேப்பு "தன் சகோதரரில் விசேஷித்தவனாக" இருந்தான்.

எதார்த்தத்தில், யோசேப்பு தன் வாழ்க்கையில் பலமுறை பாவம் செய்திருக்க வேண்டும் என்பதை பொதுவான அனுபவத்திலிருந்து நாம் அறியலாம். இது, இயேசுவைத் தவிர எல்லா வயதிலும், எல்லோருக்கும் பொருந்தும். ஆகவே, ஏன் மோசே யோசேப்பை இவ்விதமாக பூரண புருஷனாக சித்தரித்தார்? அவருடைய நோக்கம் என்ன? தேவன் யோசேப்புக்கும் அவருடைய சந்ததிக்கும் இஸ்ரவேல் கோத்திரத்தாரிடையே விசேஷித்த முக்கியத்துவம் கொடுத்திருந்தார் என்னும் உண்மையில் இதற்கான பதில் இருக்கிறது.

யோசேப்பு மற்றும் அவரது சந்ததியின் முக்கியத்துவம் முதல்முறையாக ஆதியாகமம் 48:1-22 இல் யோசேப்பின் குமாரருக்கு செய்யப்பட்ட விசேஷித்த ஏற்பாடுகளின்போது வருகிறது. இவ்வசனங்களில், யாக்கோபு யோசேப்பின் குமாரராகிய எப்பிராயீமையும் மனாசேயையும் தன் சொந்தக் குமாரர்கள் போல ஆசீர்வதித்தார். 1 நாளாகமம் 5:1 இன்படி, ரூபன் தகாத உறவு கொண்டதால் தன் சேஷ்டபுத்திர ஸ்தானத்தை இழந்தான். ஆகவே, யாக்கோபு எப்பிராயீமையும், மனாசேயையும் தன் சொந்தக் குமாரராக தத்தெடுத்துக்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

கொண்டதன் மூலம், யோசேப்பு யாக்கோபின் முதல்பேறான குமாரனைப் போல இரண்டு மடங்கு ஆசீர்வாதங்களைப் பெற்றார்.

இந்த ஏற்பாடுகளில் மிகவும் சுவாரசியமான பகுதிகள், யாக்கோபு மனாசேக்கு பதில் எப்பிராயீமை அதிகமாக ஆசீர்வதித்ததை விவரிக்கும் 48:13-20 இல் உள்ளன. நிறைவான ஆசீர்வாதத்திற்கு அடையாளமான யாக்கோபின் வலதுகரம் மனாசேயின் தலையில் வைக்கப்படும்படி யோசேப்பு மிகக் கவனமாக தன் குமாரரை யாக்கோபின் முன்பு நிறுத்தினார். அதன்படி, குறைவான ஆசீர்வாதத்திற்கு அடையாளமான யாக்கோபின் இடதுகரம் எப்பிராயீமின் தலையில் வைக்கப்பட வேண்டும். மனாசே யோசேப்பின் முதல்பேறான குமாரனாக இருந்தபடியால் இந்த ஏற்பாடு ஏற்றதாகத் தோன்றியது. ஆனால், எவ்வித விளக்கமும் இன்றி, யாக்கோபு தன் கரங்களை மாற்றி, இடதுகரத்தை மனாசேயின் தலையிலும், வலதுகரத்தை எப்பிராயீமின் தலையிலும் வைத்தார். இதை விரும்பாத யோசேப்பு, மனாசேக்கு ஆதரவாக யாக்கோபின் கரங்களை மாற்றி வைக்க முயற்சி செய்தார். ஆனால், அடுத்து நடந்ததை ஆதியாகமம் 48:19 இல் கவனியுங்கள்:

> ”அவன் தகப்பனோ தடுத்து: அது எனக்குத் தெரியும், என் மகனே, எனக்குத் தெரியும்; இவனும் ஒரு ஜனக்கூட்டமாவான், இவனும் பெருகுவான். இவனுடைய தம்பியோ இவனிலும் அதிகமாய்ப் பெருகுவான்; அவனுடைய சந்ததியார் திரளான ஜனங்களாவார்கள்” என்றான் (ஆதியாகமம் 48:19).

அல்லது இதனை, “அவர்களே முழுமையான ஒரு தேசமாவார்கள்” என்றும் சொல்வதாகக் கொள்ளலாம். எண்ணாகமம் 2:18-21 மற்றும் உபாகமம் 33:17 போன்ற வேதபகுதிகள் மனாசேயை விட எப்பிராயீம் எண்ணற்ற ஜனமாகப் பெருகி, முதன்மையானவனாக இருந்தான் என்று குறிப்பிடுகின்றன. உண்மையில், தேசங்கள் பிற்பாடு பிரிந்தபோது வடதிசை இஸ்ரவேல் ராஜ்யம் முழுவதும் பெரும்பாலும் “எப்பிராயீம்” என்று அழைக்கப்படும் அளவிற்கு எப்பிராயீமின் ஆதிக்கம் பெரிதாக இருந்தது.

இவையனைத்தும் நவீன காலத்தில் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர்களுக்குப் பொருந்தாததாகத் தோன்றலாம். ஆனால், யோசேப்பு மற்றும் அவரது சகோதரரின் உலகத்தில் எதிர்பாராத விதமாக எப்பிராயீமுக்குக் கொடுக்கப்பட்ட முக்கியத்துவம், மோசேயின் ஆதி வாசகர்கள் இருந்த உலகத்தில் அவர்களுக்குக் குறிப்பாக முக்கியமானதாக இருந்த, தேவனால் நியமிக்கப்பட்ட ஒரு ஏற்பாட்டைக் குறித்தது. மோசே ஆதியாகம புத்தகத்தை எழுதியபோது, தேசத்தின் தலைமைத்துவப் பொறுப்பை தனக்குப் பின் தன்னுடைய ஆதரவில் இருந்த யோசுவாவிற்கு கொடுக்கவிருந்தார். ஆனால், மோசே, ஆரோனைப் போல யோசுவா லேவி கோத்திரத்திலிருந்து வந்தவர் அல்ல. அவர் ராஜரீக யூதா கோத்திரத்தைச் சேர்ந்தவரும் அல்ல. மாறாக, யோசுவா மற்ற கோத்திரங்களுக்கு மேலாக தேவன் ஆசீர்வதித்த எப்பிராயீம் கோத்திரத்தைச்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

சேர்ந்தவராக இருந்தார். ஆக, இந்தப் பதிவில் மோசே தனக்கு அடுத்து வருபவரைத் தெரிவு செய்ததை சரியென நிரூபிக்கும் விதத்தில் எப்பிராயீமை மேற்கோளிட்டுக் காண்பித்தார். யோசுவாவின் மரணத்திற்குப் பின்னரே யூதா கோத்திரம் தலைதூக்கியது. எப்பிராயீமனாகிய யோசுவாதான் தேசத்தாரை வாக்குத்தத்த தேசத்திற்குள் நடத்திச் செல்பவராக இருந்தார்.

கிறிஸ்துவைப் பின்பற்றும் நவீன காலத்தவர்களாகிய நம்மை நம் உலகத்தில் தேவன் நியமித்திருக்கும் வித்தியாசமான ஆசீர்வாதங்கள் மற்றும் பொறுப்புகளை ஏற்றுக் கொள்ளுமாறு யோசேப்பு மற்றும் அவரது சகோதரருடைய கதையின் இப்பரிமாணம் அழைப்பு விடுக்கிறது. இயேசு தம் ராஜ்யத்தின் துவக்கத்தில், தம் ஜனத்திற்கு பலவிதமான வரங்களைக் கொடுத்து ஆசீர்வதித்தார். அவர் சிலரை அப்போஸ்தலராகவும், தீர்க்கதரிசிகளாகவும், போதகர்களாகவும், இதுபோன்ற மற்ற வரம் பெற்றவர்களாகவும் நியமித்தார். அவர் வெவ்வேறு விதமானவர்களை வித்தியாசமான கடமைகளைச் செய்யவும், சிலாக்கியங்களைப் பெறவும் அழைத்தார். கிறிஸ்து தம் ஜனத்தைப் பிரிப்பதற்காக அல்ல, மாறாக ஒருவருடன் ஒருவரை இணைப்பதற்காகவே இந்த வேற்றுமையை ஏற்படுத்தினார். கிறிஸ்துவின் ராஜ்யம் தொடர்ந்து செயல்படும்போது, பரிசுத்த ஆவியானவர் தம் விருப்பத்திற்கேற்ப வரங்களைப் பொழிகிறார். ராஜ்யத்தின் உச்சக்கட்டத்தில் கூட, கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர்களை தேவன் கனம் பண்ணும் விதத்திலும் சில வேற்றுமைகளைக் காண்போம். யோசேப்பு மற்றும் அவரது சகோதரரின் கதையை நம்முடைய உலகத்தில் பிரயோகிக்கும்போது, ஒவ்வொரு காலக்கட்டத்திலும் தேவன் தம் ஜனங்களிடையே நியமித்திருக்கும் பலதிறப்பட்ட காரியங்களை ஏற்றுக் கொண்டு மதிப்பது அவசியமாகும்.

# முடிவுரை

யோசேப்பு மற்றும் அவரது சகோதரரைப் பற்றிய இப்பாடத்தில், ஆதியாகமத்தின் கடைசி முக்கிய கருப்பொருளின் அமைப்பு மற்றும் பொருளடக்கத்தைப் பார்த்தோம். மோசே முக்கிய கருப்பொருள்களை வலியுறுத்த எவ்வாறு இந்த அதிகாரங்களையும், ஆதியாகமத்தின் முந்தைய பகுதிகளையும் பயன்படுத்தினார் என்றும், இஸ்ரவேல் தேசத்தின் ஒற்றுமையையும், வேற்றுமையையும் இந்த அதிகாரங்களில் மோசே விசேஷித்த விதத்தில் வலியுறுத்தியதையும் பார்த்தோம்.

யோசேப்பு மற்றும் அவரது சகோதரரைப் பற்றிய கதை, இஸ்ரவேலின் முற்பிதாக்கள் ஒருவருக்கொருவர் சமாதானத்துடன் வாழ்வது எத்தனை கடினமானதாக இருந்தது என்பதை நமக்கு வெளிப்படுத்துகிறது. ஆனால் இறுதியில், தேவன் அவர்களுக்கிடையே நிலையான அன்பின் பிணைப்பை

ஏற்படுத்தினார். இசைவின்மை, ஒப்புரவாகுதல், மற்றும் இசைவு பற்றிய இக்கதை ஆதியில் இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரத்தாரையும் அவர்களின் காலத்தில் தேவனுடைய ஜனமாக மனந்திரும்புதலுக்கும், ஒப்புரவாகுதலுக்கும் அழைக்கும்படி எழுதப்பட்டது. இன்றும் அது, கிறிஸ்துவைப் பின்பற்றும் நம் மத்தியில் பிரிவினைகளைத் தவிர்த்து, அன்பின் பிணைப்புகளை உருவாக்குமாறு நமக்கு அழைப்பு விடுக்கிறது. கிறிஸ்துவின் சரீரமாகிய நாம் கிறிஸ்துவின் சுதந்தரத்தைப் பகிர்ந்து கொள்ள வேண்டியவர்கள். யோசேப்பு மற்றும் அவரது சகோதரரைப் பற்றிய கதை, இன்று உலகெங்குமுள்ள தேவனுடைய ராஜ்யத்தினிமித்தம் தேவனுடைய ஜனத்தின் ஒற்றுமைக்காக எவ்வாறு நம்மை அர்ப்பணிக்க வேண்டும் என்பதற்கான ஈடுசெய்ய முடியாத வழிநடத்தலாக விளங்குகின்றது.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.